ஸ்ரீ

ராஜராஜேஸ்வரி துணை.

மன்மத

சரித சல்லாப சவால்

# நவீன நவரத்தின

# இலாவணி

(எரிந்த கக்ஷி—எரியாத கக்ஷி.)

அநேக நாடக காவிய நாவல் இயற்றமிழாசிரியன்

**பு. இராஜகோபாலன்**

எழுதியது.

சென்னை

தி. இராஜகோபால் முதலியாரவர்களது

"ஆநந்த குணபோதினி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 302, தங்கசாலைத் தெரு சென்னை.

காபிரைட்]

1928.

இது மூன்றும் வருட ஆரம்பம்.

# ஆநந்த குணபோதினி

## ஒரு நூதன உயர்தரத் தமிழ் மாதப் பத்திரிகை.

இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. 10,000 சந்தாதாரர்களை யுடையது. வருஷசந்தா ரூபாய் ஒன்றே. (ரூ. 1-0-0) வெளிநாடுகளுக்கு ரூ. 1-4-0 பிரதி மாதமும் 48 பக்கங்கள் கொண்டது. பிரஸித்த அனுபவ ஞான சாஸ்திரி இதன் ஆசிரியர்.



இத்தகைய நவீன மாத சஞ்சிகை இது வரையில் வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில பாஷை சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. வெகு முக்கியமான விஷயங்களைக் குறித்து அநேக வியாசங்கள் இதில் ஒவ்வொரு தடவையும் தோன்றும். குறித்த நேரத்தில் வருவது. காலத்தை யொட்டிய கருத்துக்கள் நிரம்பியது. படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகீக பக்தியும், பாஷா ஞானமும், சுதேச சிந்தனையும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாகக் கூடிய விதமாய், உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் பொதுவாய், சகல மதஸ்தர்களுக்கும் இன்பமாய், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய், எப்போதும் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றதாய், சொல் நயம் பொருள் நயம் தோன்ற எழுதப்பட்டுத் தமிழ் உலகமெல்லாம் சென்று உலாவி வருகின்றது. ஒவ்வொரு தடவையும் "விகடப்பிரதாபன்" தோன்றுவான். விகடத் தலையங்கங்களும், ஹாஸ்யங்களும் தோன்றி சலித்துப் போன மனதையும் உல்லாசப்படுத்திவிடும். இப்பத்திரிகை வெகு சிறந்ததென்பதை பிறருடைய சிபாரிசின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அனுபோகத்தில் தாங்களே அறிந்துகொள்ளலாம். சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். உடனே எழுதுங்கள்!! ஒரு மாதிரி காபி வரவழைத்துப் பாருங்கள்.!!!

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ் 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

ஸ்ரீ

ராஜராஜேஸ்வரி துணை.

மன்மத

சரித சல்லாப சவால்

# நவீன நவரத்தின

# இலாவணி

(எரிந்த கக்ஷி—எரியாத கக்ஷி.)

அநேக நாடக காவிய நாவல் இயற்றமிழாசிரியன்

**பு. இராஜகோபாலன்**

எழுதியது.

சென்னை

தி. இராஜகோபால் முதலியாரவர்களது

"ஆநந்த குணபோதினி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 302, தங்கசாலைத் தெரு சென்னை.

1928.

காபிரைட்]

# நான்முகம்

வித்வ விற்பன்ன வேந்தர்காள்! மன்மத சரித சல்லாபமாவது வேதாகம புராண இதிகாஸ வேதாந்த தத்துவ சாரநூல்கள் இப்பரதகண்டத்தின் கண் பரந்துக் கிடப்பதை விரும்பி பயிர்ச்சியுறப் பகுத்தறிவை யளிக்கும் ஓர் அரிய சாதனமாம், எனினும், வித்தியாரம்பம் சிறிதுமற்ற விவேக சூன்யர்களாகிய பலர் தன் மொழிக்குரையே இன்னதென உணராமல் தப்பட்டையடித்து காசாசை கொண்ட வேசியர்போல் காலக்ஷேபம் புரிந்து கலகத்தைப் பலப்படுத்தி கற்றோரும் மற்றோரும் கவலையுற ஆபாஸச் சொற்களைத்தூற்றி அவமதிக்க விடுகின்றனர். அந்தோ! எண்ணரிய நூல்களை எடுத்தாராய்ந்து இரவு பகல் நித்திரையின்றி இக்கக்ஷிகளை இயற்றியளித்த ஆசிரியர்களின் கஷ்ட நஷ்டத்தை ஏட்டுச் சிட்டுக் கவிராயர்கள் எளிதம்செய்ய முன் வந்தனர் போலும், என்பதை, உன்னும் நமது மனம் புண்பட முனைவதால் எமதன்பார்ந்த நேயர்கள் வேண்டுகோட்கிணங்கி, எனதரும் தந்தையார், தமிழ் கலைப்பா வாண ஞானசிரியர் ஸ்ரீலஸ்ரீ நாராயணசாமி நாயகரவர்கள் பாற்கொண்ட கல்வி கேள்வியாராய்ச்சி யானும், பாலப் பருவமுதல் அத்வைத ஜண்ட மாருதம் தஞ்சைக்காந்தை ஸ்ரீலஸ்ரீ இராமசாமி உபாத்தியர் திரிசை-பட்டாராம் பிள்ளை ஸ்ரீமான் சின்னுசாமிப் பிள்ளை தஞ்சை சமஸ்தான முத்தமிழ் வித்வான் திரிசிபுரம் - ஸ்ரீலஸ்ரீ வைதிலிங்க தேசிகர் வாசிவானுபதேசி நாகை - கோவிந்தசாமி உபாத்தியாயர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி செட்டியார் அதி வீர தீர ஜெய கா. வே. சிங்காரவேல் நாடார் ஆகிய இவர்கள் மாபில் பயிர்ச்சியடைந்த மன்மத தகன நிவாரண சாம்பரதாயத்தானும், இந்நூலை வரைய முற்பட்டேன். ஆயினும் திருவாடுதுரை ஆதீனபண்டாரச் சந்நதியவர்கள் வம்சத்தவராகிய கடம்பத்தூர் ம-ா-ா-ஸ்ரீ பொன்னுசாமி தேசிகாவர்கள் வி[illegible]ணம் மன்மத தகன பூரணைப்பாக்கள் சிலவற்றையும் சொந்த அநுபவ முறையாய்ச் சேர்க்க நேர்ந்தது. இது நிற்க ஏராளமாகிய எழுத்து ஜோலிகளுக்கிடையில் என்னுற் கூடிய பிரயாசையுடன் இதைக் கவனித்தும் சிற்சில

அச்சுப்பிழைகளும் சொற்பொருட் குற்றங்களும் அமைந்திருக்கலாம். ஆகவே கல்வியதிபர்களாகிய கனவான்கள் குற்றம் நீக்கி குணங்கண்டாதரிக்கக் கோருகிறேன்.

இரண்டாம் பாகத்தை எதிர்ப்பாருங்கள்.

பு. இராஜகோபாலன்.

---

# பாட்டு.

1

தேசமெங்கினும் மகிழ்ஜோக்கு மணியே
தேடியிவர் இலாவணியை நோக்கு இனிய
தேனமிர்தம் இராஜகோபால் வாக்கு
திவ்யகேக்கு தங்க ரேக்கு சகி
தோகையிந்த சிங்காரத்தின் டீக்கு (தேச)

2

மஞ்சளிட்டுக் கஸ்தூரி நீராடு சிறுமா
மிதமுடன் கண்களிலே சூடு மருவு
மல்லி மனோரஞ்சிதத்தோடு
ஜடைபோடு சரிகைகோடு யிட்ட
மஸ்லீன் புட்டா ரவிக்கைக்கிடு (தேச)

3

காசி பம்பாய் பனாரஸ்சேலை இது
ஒக்கக்கோளர் சித்திரக் கைவேலை காணக்
கண்ணைபறிக்குதே சுவாலை
இரதிலீலை இந்திர சோலை போலக்
கிளாவர் மூக்குத்தியு புலாக்கிலை (தேச)

4

சந்தன அத்தர் பனிநீர் வாசம் பொட்டு
சாந்து சவ்வாது மணம் வீசும் ஈருன்
செண்டு புனுகுடனுல்லாசம்
ப்ரகாசம் பகற்கூசும் சந்திர
சூரிய ஜடைபில்லைகள் பூசும் (தேச)

5

காதில் ரவக்கம்மலடி மானே செயின்
கழுத்தணி அட்டிகையும் தானே மொகரு

காசுமாலையதுவும் தானே
தருவேனே தன்யநானே போட்டு
கல்லிழைத்த தொங்கலதை ஊணே (தேச)

6

பட்டைபுனு செயினைசேர்த்து காலில்
பாதசரம் லாடமெட்டும் கோர்த்து வந்தால்
பாரிலுள்ளோர் மனமெல்லாம் ஆர்த்து
நம்மைப்பார்த்து நாணிவேர்த்து போவார்
பஞ்சவர்ண அஞ்சுகமே பூர்த்து (தேச)

7

வங்கிமுன்னே காப்பதனைச்சேரு மங்ளூர்
வளையல்களைக் கலகலெனக் கோரு சிறிய
விரல்களில் மோதிரங்கள் சிரு
என்னஜோரு எதிர்பாரு இடையில்
விந்தையான ஒண்டியாணக் கூறு (தேச)

8

பிட்டின் ரவேஸாமுத்து சுன்னம் ஏலம்
பச்சைக்கற்பூர ஜிண்டானின்னம் ஜாதி
பத்திரிலவுங்கமுடன் முன்னம்
சுருள்பின்னம் செய்தன்னம் கையில்
பற்றிப்புறப்படடி சொர்னம் (தேச)

9

காளிங்கருயமுதலீ வீதி இதனில்
கதவிலக்கமிருபதென்றோதி விட்டு
கூடிவந்தால் இராஜகோபால் க்யாதி
பெண்ணேஜோதி பத்னி ஜாதி எங்கும்
கூறுகிறார் கல்வியின் ப்ரைக்யாதி (தேச)

10

அம்பா ளடிபணியும் தாஸன் கல்வி
அறிவுடையோர் தமக்கு நேசன் நூல்க
ளநேகமியற்றும் பிரகாசன்
உபதேசன் உணர்வாசன் இந்த
அகிலம் புகழும் உல்லாசன் (தேச)

ஸ்ரீ

ராஜராஜேஸ்வரி துணை.

மன்மத தகன நிவாரண

# அற்புத சல்லாப ஆநந்த இலாவணிகள்

விருத்தம்.

சத்துசித்தாய் சராசரமா யைம்பூதமாகி
சகலஜீவ பகலிரவாம் அருளைப்போற்றி
நத்தியெந்தன் தந்தைதாய் பாதம்போற்றி
நலமுடனே அரிஓமென் றுபதேசித்து
சுத்தமதா யிலக்கண விலக்கிய
சொற்பய னுரைத்தோர் கருத்தைப்போற்றி
புத்திமிகும்பெரியோர்க ளடியைப்போற்றி
போற்றுவேன் சபையிலினி சாற்றுவேனே. 1

திருவுலவும் முன்னோர்கள் செய்த நூலை
தினம்தினமு மாராய்ச்சி செய்ததாலே
குருபரனின் பாதமதை சிரத்திலேற்றி
குவலயத்தி லில்லறத்தோர்க் குகந்தமார்க்கம்
பெருமையுடன் காவியபுரா ணமெல்லாம்
பேசுவதை ஒவ்வொன்று யெடுத்துக்காட்டி
மருமலர்க் கவிபொழிய வந்தேனின்று
மகான்க ளடிபோற்றி மகிழ்வீர்மாதோ. 2

என்னிடத்தில் கவிபாட உமக்கிஷ்டமானல்
எழுத் தசை சீர்பொருத்த மிருக்கவேண்டும்

நன்னயமா யடிதுடைகள் செழிக்கவேண்டும்
நாவலரே எழுகமொடு பராசம்வேண்டும்
அன்னித சங்கைகோள் நிந்தையொடு
அறியாத நூல்வழியின் தர்க்கம்கோபம்
பின்னமுறநீக்கியே பாடவேண்டும்
பிழைபடா துடன்பாடோ புகல்வீர்மாதோ. 3

கேட்பதற்கு மட்டும்பதில் மொழியவேண்டும்
கேளாத வாதமதை ஒதொணுது
பாட்டுக்கு பாட்டென்றும் பகரொணுது
பாவலரே கருத்துரைகள் பதியவேண்டும்
நாட்டமுறும் சாஸ்திரத்தை காட்டவேண்டும்
நயமாக ஒவ்வொன்ருய் மொழியவேண்டும்
வாட்டமுற்று கலகமது செய்யொணுது
வல்லமைகள் உண்டெனி லெதிர்ப்பீர் மாதோ. 4

திருமாலின்புதல்வனென் ருெவனும் மன்மதன்
திடமாகவே சிவனின்
தீவிழிப் பட்டெரிந் தானெனப் பெரியோர்முன்
தீங்கிலா துரைக்கவந்த
பெருமையுளபுலவீரே நிச்சயப் படுத்த நீர்
பேசுவதெம் மார்க்கமையா.
பிசகிலா வேதமா சாஸ்திரமா ஆகமமா
புகலுமத் வைதவழியா
அருமையா மாதிநூலா வழிநூலா புலவா சொல்
அழகுடைய சார்புநூலா
அல்லது தர்க்கமா குதர்க்கமா கோர்வையா
அறையுமிதி காஸ நூலா

உறுதியா ஞானமா யுக்தியா அநுபவமா
உரையும்நூற் பெயரைமாதோ. (5)

## பாட்டு.

எட்டாது உம்மறிவிற்கே னிந்தகக்ஷியே. (எட்)
கொட்டாவிவிட்டுடேப்பை கோடானுகோடிபேர்
மெட்டாகத்தட்டினும் கிட்டாதெமைஜெயிக்க (எட்)
செல்லாதபுராணமதை செப்பும்புலவர்களே
நில்லாதுன்வாதமது நிக்ஷயமென் கக்ஷியையா. (எட்)
கருத்துரைதாமறியா கவிவாணர்கூட்டமெனில்
பொருத்தமுமக்காகுமையா புகலும் செய்யுட்பதமுணர.
பஞ்சலக்ஷணக்கவி பாரிலிலங்கப்புகழ்
கொஞ்சிடும் இராஜகோபால் கூறும் வினைவருமை. (எட்)

## வேறு மெட்டு.

ஆரோவென்றெண்ணி வந்தீரோ ஆணவமாய்ப்பாடசபையில்
எவரோவென்றெண்ணி வந்தீரோ என்னுடன் நீர்பாட (ஆ)
உங்களின் கக்ஷிக்கு ஆதாரமாக ஓதிடும்புராணமெது
சபைமீது விடுவாது, ஓடாதே. (ஆ)
வேதமாசாஸ்திர புராண அத்வைதவேதாந்தமா? கூறு ஒரு
வாறுசபைநேரு, பலேபா. (ஆ)
ஆதிநூல்வழிநூல் சார்புநூலென்பதின் அர்த்தம்—
தெரிந்தண்ணே இதன்பின்னே, படிமுன்னே, ஓடாதே.(ஆ)
அநுபவம்யுக்தியென்று தாரமாகிலும் ஆன்ஸர்கொடுப்பாயா
வீண்வாயா ஏன்நேயா, பலேபா. (ஆ)
சமயநூல்பொதுநூல் தர்க்கம்குதர்க்கமா சாற்றுவாய் நீபாடி
கவிஜோடி மனம்வாடி, ஓடாதே. (ஆ)
தெந்தினதெம்மாங்கு சிந்தித்துக்கவிபாட தீரமாய் நீவந்து
முகம்வெந்து மனம்நொந்து, பலேபா. (ஆ)

கேட்டதைவிட்டினி பாட்டுக்குப்பாட்டென கேலியாய்ப்
[பாடாதே
இப்போதே அவைமீதே, ஓடாதே. (ஆ)
இந்நகரெங்கினும் நன்னயமாகவே இராஜகோபால் பாட்டு
இதைக்கேட்டு விடைநாட்டு, பலேபா. (ஆ)

விருத்தம்.

திசையெங்கும் கீர்த்திபெற்ற கனவான் தாங்கள்
இடமாக பதில்சொல்ல வழியைக்காணோம்
அசைசீர்கள் பொருத்தமொடு அருத்தம்காணோம்
ஆதியிலே கேட்டதற்கே விடையும்காணோம்
இசையுடனே இலக்கணமும் பதியக்காணோம்
இன்னமுமுன் நூல்பெயரை உரைக்கக்காணோம்
கசையடிபோல் புராணவழி கொடுப்பேனந்த
கருத்துணர்ந்து பொருத்துவீரா ளருவீர்மாதோ.

கும்மி.

வேதப்பெயர்களைக் கேளுமையா கொஞ்சம்
வித்தையிற் றெளிந்த உத்தமரே.
ஓதவே உருக் யஜுர்சாம அதர்வண
உற்பத்தி நால்வேதம் தானுமே.
வேதாந்த ப்ரபோகரபாட்டம்
உத்தா மீமாஞ்சையொடு
காதாரக்கேளுங்காண் வைசடீகமென
களருவாராறு சாஸ்திரத்தை
மச்சியகூர்ம வராகவாமன
மார்கண்டேய வைணவமும்
அச்சமில்லா தமிழ்பாக வதசைவம்
அறையக் கேளுங்காண் நாவாலே
பிர்மகை வர்த்த காருட ஸ்காந்த

பௌடீக பதுமநாரதியம்
பிர்மலிங்க ஆக்கி நேயமுடன்
பிர்மாண்டமெனத் தெளிவீரே
பதினெட்டு புராணமுரைத்தேனே இதை
பார்த்துக்கொள்சமைய நூல்தானே.
மதியால் பொதுநூ லென்னும் சித்தர்மொழி
மார்க்கம் தெரிந்துரை நாவாலே.
உன்னிதநன்னய இராஜகோபால்மொழி
ஊக்கமதாகவே தாமும்கொண்டு
பன்னிப்பன்னி கவிபாடுவதோபயன்
பாவலர் நாவலர் காவலரே. வேதப்

## விருத்தம்.

மாமலர்த்தேன் சுரும்பார்ந்த சென்னைவாழ்
மகத்தான புலவர்களே செப்பக்கேளும்
காமமத துரைஇராஜ இராஜகோபால்
கவிமீறி வழிந்தோடி வாசம்வீசி
தேமதுரம் உலகமெலாம் படர்ந்துத்தாவி
தெளிவுறுத்தி விட்டதுங்கள் ஜெனனம்மாறி
போமதற்குள் நற்றமிழைப் புசிப்பதற்கு
புறப்பட்டு வந்தெதிரில்கொள்வீர் மாதோ.

## பாட்டு.

எல்லாம்சிரிக்கலாச்சுதே எரிந்தகக்ஷி
ஏங்கியோடக்காலம் வாச்சுதே. (எல்)
வல்லவர்போல் வந்துமுன்னே வாயடங்கிப்போனீர்பின்னே
கல்விதனிற்றெளிந்தவரே களருமையாகேள்விக் கான்ஸர்(எ)
சத்தியமாய் சொல்லுவீரா ஷகரிலென்னை வெல்லுவீரா
இத்தரையில் கீர்த்திவான்போல் எதிரியென வந்தவுடன் (எ)

முந்திவந்த முடுக்கைக்கண்டு முடிவுசெய்வீர் கக்ஷியென்று
அந்தமாக கார்த்திருக்க அவலமாகச் செய்ததாலே (எ)
எதிரியில்லை என்றதாலே எடுத்தேன்கவி குறடாபோலே
மதியில்லாமல் பதிலைச்சொல்ல மயங்குகிறீரையோ பாவம்(எ)
உன்னிடத்தில்யானும் பாடயோக்கியமா சொல்லுங்கூட
நன்னயமாய் முழிக்கின்றீரே நாவலரே எழுந்தோட (எ)
எங்கும்நீங்கள் பங்கப்பட்டு எங்கித்திண்ணை தூங்கிபின்னும்
சங்கையின்றிவாதியென சாற்றலாமோ கூடியின்னும் (எ)
மதுரமொழி இராஜகோபால் மன்னன்கவி தன்னைத்தேடி
பதுங்கியோடும் பாவலரின் பத்திரிகை முன்னேகூடி (எ)

வசனம்.

முத்தமிழ் இலக்கண விலக்கிய நன்னூல் தொன்னூல் நிகண்டு வேதசாஸ்திர கலைக்யான தத்துவ முதுமொழிக் கவி பொழி தீரென்றுமைநோக்கி யான் முதல்நூலெது? உறுதிப் புராணமென்ன? மன்மதன் பிறந்தெரிந்த கக்ஷிக்கு ஆதார மதில் யாதெனக் கேட்டேன். இவைகளுக்குத் தனித்தனி விடைகொடாது ஸ்காந்தம், கந்தமெனத் தெளியாமல் பன்மையாய் பகர்ந்து விட்டீர் ஆகிலும் சந்தோஷம் ஷை புராணங்களில் என் வினக்களுக்குத் தக்க விடையுண்டா? காண்பியாவிடில் தங்கள் கக்ஷி இன்றோடு தோல்வி தானே? இது நிற்க ஷை புராணம் எக்காலத்தில் எந்த சமயத்தைப்பற்றி யாரால் இயற்றப்பட்ட தென்பதை அறி யீர்போலும் ஓதிவருகின்றேன் சாதுவாகக் காதுகொடுத்துக் கேட்டுவாரும் புலவீர்.

விருத்தம்.

ஆகமங்கள்பலவிதமாய் முன்னுல்செய்தார்
அதுவெல்லாம் சமயநூல்மார்க்கமாகும்

பாகமதாய்பிரித்து பலகாண்டமாக்கி
　　பாவலரே செய்துவைத்தார் வழிநூலென்றே
மோகமுடன் உலகில் நம்போல் புலவரெல்லாம்
　　முத்தமிழாய்பாடினது சார்புநூலாம்
ஏகமதாம் இதிகாஸ புராணமெல்லாம்
　　எடுத்துரைத்தால் மதவழியாய் கொள்ளார்மாதோ.

பாட்டு.

அநியாய மனியாயம் ஆரும் சகியாரிந்த (அநி)
மனிதரின் திரேகத்திலே மதனெரிந்தால் கலவியுண்டா?
நீகட்டிய
மனைவியேன் தாயில்லையா மயங்காதே பதில்சொல்லையா (அ)
சரிதானே சரிதானே? சபையிலிவர் பேசுவது (சரி)
விரிவான உலகமதில் வித்தழிந்தால் பிள்ளையுண்டா?
இவர்வந்து
தெரியாமல்விள்ளுவதும் திருத்தியதை சொல்லுவதும் (அ)
சொல்லுங்கள் சொல்லுங்கள் சுருதிவழியறிந்திடவே (சொ)
எல்லாவிதஜீவஜெந்தும் எரிந்தாலே உதிப்பதேது
கக்ஷிசெய்ய
வல்லமையாய்வந்ததேது வருத்துமந்த வழியைசாது (அ)
கவிராஜன்கவிராஜன் கல்விக்கடலில் நீந்துமெங்கள் (கவி)
புவியெங்கும் புகழுந்தேற்றும் புண்ணியனும் இராஜகோபால்
எதிரினில்
செவிசாய்த்து உரையறிந்து செப்புவதும் பறையறைந்து(அ)

பாட்டு.

இந்தா உன்புராணங்களின் சந்தேகம்தனைச்
　　சொல்வேன் இதுநிஜமா சொல்வததுநிஜமா
முந்தி விஷ்ணுபுராணம் விஷ்ணுசித்தமதிலே
　　மன்மதன் பிறந்ததாய் உரைத்திருக்க

பந்தமாயறைகுது உபதேசகாண்டமதில்
பார்ப்பானைமதனுக சிவனுக்க
சொந்தமாகக் கிருஷ்ணன் ருக்மணிவயிற்றில்
சுதனுகபாகவத முறையுரைக்க
இவ்விதமாய் மதன்பிறந்த புராணங்களில் (இது நிஜமா

பாகவதம்தன்னிலே அணங்கநாட்டிலேமதன்
பற்றிஎரிந்தானென்பது நிஜமா
சோகம்கொள்ளாதே அய்யா கந்தபுராணமது
சொல்லுதே எரிந்த நிமயகிரி
போகாதே பதில்சொல்லும்மா மாயூரப்புராணம்
புலம்புதே கொருக்கையிலென்றலறி
ஆகமபுராணங்க ளிப்படி யுரைப்பதால் (அது நிஜமா)

கம்பராமாயணத்தி லங்கதேசத்தில் மதன்
கரிந்தானென்றறைகுதே யதுநிஜமா
தெம்பாயருணஜலப் புராணமதில் மதன்
தீரமேருகிரி எரிந்ததாக
நம்பலாமோ பிர்மபுராண மதனிலின்னம்
நாவலரே கைலேயிலென்பதாக
வம்புசெய்யுதேபுராணம் இந்தவிதமதனில் (இது நிஜமா)

ஏட்டிலே பாடம்வாங்கி பாட்டுப்படித்து தாங்கள்
எரிந்தானென்றீரே கஷியிதுநிஜமா
கோர்ட்டார் சித்தூர்ஜில்லாவில் கொடுத்துயிருக்கத்
கொஞ்சமு மறியாமல் சபைதனிலே [தீர்ப்பு
நாட்டவந்தீரே மதன்பிறந்தது மெரிந்ததும்
நாவலரே சொல்லுதா உன்நூலில் [கள் (அ-நி)
கேட்டுதா இராஜகோபால் பாட்டின் தன்கருத்துக்

வினு விருத்தம்.

சுந்திரஞ்சேர்சபையதனில் பாடவந்த
சிநேகரே உம்மையொன்று கேட்குறேன்யான்
விந்தையதாய்தமிழதற்கு முந்தியெந்த
விரிவானபாஷையது விளங்கிற்றய்யா
அந்தமதாய்தமிழதனை செய்ததாரு
ஆனதென்ன வருடமதையறையவேணும்
முந்திஅரிச்சுவடி வந்தமார்க்கமென்ன
முழுமஞ்சள்தனையறைத்து உருண்டையாக்கி
தந்திமுகனென்று அதன்சிரத்திற்புல்லை
தான்சொருகும் விதமதனை எடுத்துக்காட்டி
இந்தசபையதி லிருந்துகஷ்டி—பேசும்
இதுதெரியாவிடி லுமக்கேன்வாதம் மாதோ.

விடை பாட்டு.

அலைகடல் சூழ்புவியில் புலவநானென்றுவந்த
அற்புத சிரோன்மணியே
அறிந்துகொள்ளுன் கேள்விக்குப்பதிலினியே
கலைவழியையறியா கவிஞரே
ஆதியி லகஸ்திய மாமுனியே
கருதியரிச்சுவடி யதனை தனியே
நிலையாகப்பனையோலை யகலமதுவும்
மூன்றணிவிரல் நீயறியே
நெறியாயதன்நீளத்தையினின்று தெரியே
(உத்) சிலைமதனுக் கழுகும்பேரே
இந்தசிரதை கேட்டுவருவீரே தலையுடனிருபத்தியா
றெனத்தெரிந்திடும் சிரோன்மணியே. (அறி)
சுந்திரத் துனையொடு சுழியெழுத்தி னகலம்
சொல்லுவே னினிபாரே

சுருங்கிமுகம்வாடாதே பெரியோரே
உந்தன் குருவுக்கோதும் வெட்டரையணிவிரல்
ஒழுங்காய் பின்துளேநேரே
உண்டுகாணவை சுருதியின்படிபாரே
(உத்) இந்த வரலாறிதைப்போலே
எவர் இயம்புவாருனக் கினிமேலே
முப்புரிகயர்மூன்று முழம்பிர்ம்ம
முடியடி ரெண்டுமுடியே. (அறி)
செப்பமுடனே முதலரி யென்ற மகாவிஷ்ணு
சொல்லுவே னின்னம்பாரு
சிறந்த மஞ்சள் இலக்ஷ்மியாகத்தேரு
தப்பிதமில்லை யந்தசிற்பனநூலது தனையறியாமல்வேறு
தடுத்துயினிசொல்லாதே பலவாறு
(உத்) இப்புவியதிலெங்கள்முன்னே
இதுவென்ன கேள்விதள்ளுமண்ணே,
எப்பவும் நீரிதை ஏனென்னைக்கேட்குறீர்
அற்புத சிரோன்மணியே. (அறி)
பரமஇரகஸியத்தில்இருந்த சுழியெழுத்தை
பாரினில் கும்பமுனிக்கே
பகர்ந்தார் சுப்ரமண்யரன்றுகளிக்க,
திறமாயதிலிருந்து ஓங்காரமொலித்தது
தெரிந்த பெரியோர்சிறக்க
திடமாயிதைதெளிவுட னின்னும்பெருக்க
(உத்) மரம்போல் நின்றதப்பாலறியே
அதில் மகிழ்ந்துமே மூன்றக்ஷரம்தெரியே
தாமுடனயனா னரியதிலுண்டினி
தானெடுத்தோதும் வழியே. (அறி)
இருநூற்றிப் பதினொரெழுத்ததிலா னெழுத்
தொரு நூற்றிருபத்தேழு

இனிபெண்ணெழுத் தெண்பத்தாரதுசூழு
திருவள்ளுவருரைத்த ஞானம் நூறினில்
தெரியும் மூன்றலிபாழு
தெரிவித்தேனிவ் வரலாருனக்கு வாழு
(உத்) விருதாகேள்வி விட்டுப்போட்டு - மதன்
வெந்தவிர்த் தாந்தமதைக்காட்டு
கருதியே நாவினில் கலைமகளைத்துதிசெய்
கிருஷ்ண சாமிககவியே. (அறி)

விருத்தம்.

விந்தையதாய் மதநெரிந்தானென்று நீரே
விளம்பவந்தீர்க் கடவுளடிக்காப்பும் காணேம்
தந்திரமாயுரைத்த கக்ஷிசரியோ சொல்லும்
தருமசபையோர்கள்முன் நிஜமென்றேதான்
முந்தியிதை சாதிப்பீரய்யாபின்னே
முறைதவரி முறணுகப்பேசலாகா
சுந்தாஞ்சேர் கலியுகத்திலிந்தமார்க்க
சுருதியதுயாதெனப் புகல்வீர்மாதோ.

பாட்டு.

ஏதாகிலுமொரு கடவுளைமுதலில்
ஏற்றியே துதிசெய்து பணியாமல்
எடுத்தவுடனேகேள்வி திடுக்கெனக்கேட்டீர்
இதுவென்ன ஞாயம்சொல் ஒளியாமல்
வாதாடிடும் உன்மதமதுஎன்ன
வாயினுல்சொல்லிவா அறியாமல்
வழக்குகள்பேசுவ தொழுக்கமாகாது
வரலாறதையுரை முழியாமல்
நீதாகுணமுடன் கடவுளைநீக்கி
நீநிலம்தனிலே தளராமல்

நித்தமுமிப்படி கத்துவதொப்பிட
நியாயமா ஆதியிற்பணியாமல் (எடு

சுந்திரமான சைவர்களென்றால்
சிவன்மகன் தனைமுதல் பணிவாரே
சிறந்திடும் வைஷ்ணவராகிலும் ஆதியில்
சித்தத்தில் விஷ்ணுவை துதிப்பாரே.
விந்தையாகிய கிருஸ்தவராகிலும்
விநோதமாயே ஸ்வைத்தொழுவாரே
விளங்கிடும் இஸ்லாமானவரென்றால்
பிஸ்மில்லாவென மொழிவாரே. (எடு)

கடவுளேமுதலில் யில்லையென்று வீண்
கக்ஷிகள் பேசவந்தீரா
காரணமொன்றும் தெரியவில்லையக்
கணக்கையுரையுமுதல் சபைநேரா
படபடவெனக் கையில்டேப்பதை எடுத்து
பாடியேவந்தீர் வெகுஜோரா
பாவலரேநீர் கடவுளைமுதலில்
பணியாவிதமதை சொல்வீரா. (எடு)

இந்தகேள்விக்கு என்செய்வோமென்று
ஏங்கிபேசபைதனில் முழிக்காதே
இதுகாரணமெனப் பெரியோர்சபைமுன்
எடுத்துரையினி யதைஒளிக்காதே
சுந்திரம்புகந்திரு நாகைகோவிந்தர்
சீடன்முன்பல்லை யிளிக்காதே
சொகுசுடனே கிருஷ்ணசாமி கேள்விக்கு
சொல்லத்தெரியாமல் பழிக்காதே. (எடு)

## விருத்தம்.

அருமறையின் உரையறிந்த அவனியோர்கள்
அரன் அயன்மால் இவர்கள் தம் அநுக்ரகத்தால்
பெரும்பதவியாம் முத்திபெற்ருரென்ருல்
பேசாதோ நூல்களதன்பெருமை தன்னை
தருமார்த்த காமமோக்ஷசதுர்விதம்
தாணியோர்கள் தாமும் புருஷார்த்தங்கள்
குருவாணை அநுபவித்துக் கொண்டாராஞல்
கொள்ளாம் முத்தியல்லால் கூடாதன்றே.

## பாட்டு.

எங்கினும் அதிகப்ரசங்கரமாத்தாதே யிரங்கி மதன்
எரியானரன்விழியாலெனவே போடுவேன்பீரங்கி
அங்கஜனரமுரஹரியால் ஜெனித்தபின்புதானே யீஸன்
அழித்தானென்றவையதில் வருத்தவந்தீரே புலவோனே
சிங்காரமாக விஷ்ணுசித்தஜனையு மீன்றபோது முந்தி
சிவனரி அயன்மூவர் எவரால்ஜெனித்தார் காணும்ஓது
மங்களமானக்காமமாய்கைசத்திமுந்தியாச்சே உந்தன்
மார்க்கமதுகளெல்லாம் பார்த்தோர்சிரிக்கக் காலமாச்சே
தங்கத்துண்டொன்று பூமிதனிலேகிடந்து நன்ருய்ஜொலி
[க்க-அதுசத்
தில்லையெனச்சொல்லி புத்திசாலிபோல் வந்தாய்கெலிக்க
(உத்) புங்கவன்விழியால் பங்கப்படானே துங்கமாரனும்
பொதுவா மெதுவா அதுவா சங்கதி புகலுதாரணம்
(புத்தியுள்ளோரே - மெத்தவும்நீரே -

கத்துகின்றீரே - செத்தானுக்கூறே)
போகமெனும் சாகரத்தில்பாகமதாய் வேகுமோகாண் (எங்)

தம்மி :

விண்ணேது மண்ணேது பெண்ணேது ஆணேது
வெந்தாலெரிந்தாலே வித்தாந்தம்
வித்தானது செத்துதானல் முத்தாகுமோ உத்தமரே
வேதாந்தம்சொன்ன மொழியிதுவே.

அகவல்.

ஓயிற்கும்மிநூறு ஓதயிடைக்காடர்
மயிர்க்கால்பிளந்துபோல் மண்ணிலுரைத்தாரே
வெயிற்கண்டமஞ்சள்போல் தாங்கள்
வெளுப்பேறிப்போனீரே -
குயில் மேளம்கொண்ட கொற்றவனைசுட்டீரோ ?

தில்லாலே.

இடைக்காடர்சொன்ன ஓயிற்கும்மி
இங்கெல்லோரறியத்தெரியுமிது
கிடைக்காட்டாலென் குருவிடம்வா
அவர்கிருபை செய்தால் வெளியாகும்
விடைக்காதே காணினிமேலே நீ
வித்வசபையேறிவந்து
வடக்காலேதிரும்பிப்போக
வாச்சுது பார்வல்லவரே.

பாட்டு.

நீலகண்டனுலந்த நிர்மலன்தகிந்தானென்றீரே - மிக்க
இலக்ஷணமாயிருக்கு மொச்சைபிஞ்சிப் புலவீரே
ஓலமிட்டமுகாதே உள்ளதைச்சொல்லுகிறேனென்று - ஒரு

ஊமையனுக்குஞானம் ஆமையுரைத்த கதையொன்று
சிலமுடனேகாமம் செத்தாலுமக்கு யேதுமோகம் - இந்த

ஜெகத்தோரறிய உந்தன்முகத்தில்போடுவேன் கோபிநாமம்
ஏலம்போடுரார்தேவர் யிதோபார்வானத்திலேமீனு - என

எடுத்தான்வாயில் வாரூபாகொடுத்துவாங்குச் சுமச்சம்பேனு
(உத்) காலம்சென்றுபின் மூலம்வந்துமே வேலைப்பழிக்குதே
கதையும்விதையும் புதையு மென்ருலே [உன்
காதைப்புளிக்குதே
(கட்டுவுன் கடையை வெட்டுவேன் படையை
சுட்டானென்றிடையே - தட்டாதே துடையை)
காமமில்லா பாமரமே ஏமாராதே ஜாமத்திலே. (எம்)

ஏலப்பாட்டு.

பிரணவமே, உருவிதமாய்—பிடரிவழி, திமிர்ந்தெழுக—
தரணமதில், சரயுநதி—தளும்பிடவே, பிராணவாய்வு—
(முடுக்கு) கருவிகரணங்களும் கண்மூடிப்போக
காலைமுதலாறுவரை ஏறிவிளையாட
திருவுருவும் மும்மூர்த்தி ஏணையிலேதூங்க
தேவிபருசத்தியவள் நாதமதைவாங்க
பொரிபுலன்கள் மாரிபொங்கி வழிந்தோட
பொன்றின தொன்றுமில்லை அன்றன வில்மாரன்
சருகுநதிகரையோரம் சார்ந்தது கப்பல்
சைதன்யமோனமொடு சேர்ந்ததே கப்பல் (ஏலே)

பாட்டு.

சாம்பசிவன்விழியால் தணலானன்மாரனென்று வாலே-நீட்டி
ஜல்லிப்புராணம்வந்து சொல்லிவிட்டதா உன்முன்னாலே
கெம்பொத்தஐவேலிக்குள் கெஞ்சியொளித்தானெரிப்பானு
[உனக்
கிருக்கும்வருடங்தோரும் முருக்காய் பிடிப்பதுண்டோகேளு
வம்புக்குக்கஷிதொட்டு விருதாவாவதேனோ அய்யா- சும்மா
வித்திலாசம்பரதாயம் சுத்தமதாகத்தோன்று மெய்யா
நோம்புவேன் முறமதில்நிறையப்போட்டு உன்னையானே அ
நிமிஷநேரத்திலினி தும்ஸம்செய்வே நான்காணே [ரை
(உத்) ஆம்பிளேயானல்போம் போமெழுந்துபின்
தாம்பூலம்வாங்கியே
ஆரியம்காரியம் வீரியம்சொல்லாது
அடக்குன்ருங்கியே
(ஆகாது மோஸம் போகாது ரோஷம்
வேகாதுபாஸம் தாகாது வேஷம்) [(எங்)
அண்டமதில் கண்டறியா தொண்டர்களே கொண்டுவாரும்.

தஞ்ஞார் மெட்டு.

பாஸானவோரே கேளாஸானிடம்-உங்கள்
பக்கத்திலே அதென்ன கிஷ்டன்படம்-மேலே
பல்காக்கிதே ஜோடிலெக்காதிடம்—நீ
கொக்காய்பறக்காதே காண்என்னிடம்-இப்போ
தாஸாபறைமுழக்க இராஜர்வே உங்களுக்கு
. தந்தமறை யெடுத்தாயிந்தபக்கம்-அல்லால்
வந்தவிழிதிரும்பு அந்தப்பக்கம் செவி
மந்தமெனச் சொல்லாதேவெட்கம்.

பாட்டு.

ஏனையாகோபமுனக் கெந்தன்மே லதிகமாச்சோ உங்கள்
எரிந்தகக்ஷியின்றுடே முறிந்துதலைகவிழ்ந்து போச்சோ
ஆனைகரடி சிங்கம்யாளிசிருத்தை அண்டரெண்டு பக்ஷி
அலரும் வேங்கை புலிபலரும்அறிய கதண்டு
சேனையொடும்கூடி ஜெனித்ததஞ்சை கரந்தைபதியில் மிக
சிறப்புற்றோங்க தமிழ்துறப்பைக்காட்டினவர் சுதியில்
வீணையொத்த இராமசாமி அநுக்ரகத்தாலே அத்
வைதமுண்டசாமிநாத சிடன்பெயர்கேளே
ஊனைவிட்டுதிவ்ய உதிரம்குடிக்கும் சிறுபாலன் சும்மா
உல்டாக்காதே மாரிகொட்டும் பட்டாராம்சீலன்

(உத்) சோனைமலைதனில் யானைகருவாட்டை
பூனைபோல் விறிட்டு
சோக்காபோக்கா மூக்கருதல்போல்
தூண்டியில்பட்டு
தூங்காமல்கூறும் - பாங்காகநீரும்
ஏங்காதேவாரும் - மேங்காவலோரும்
சொல்லமுடிகொள்ளாதய்யா வல்லவரே வெல்லுவீரா. (எங்)

விருத்தம்.

சித்தஜனுர் சிவன்விழியா லெரிந்தாரென்று
ஜெகமுழுதும் கவிபாடி வந்தோர்போலே
பத்திமதன் பண்டிகையி லெரிந்ததாக
பரிகாசக் கூத்தாடும் பாவலர்தாம்
பித்தனவர் தவமதுமுன் செய்தானென்றீர்
பேசும்மதன் கணைதொடுத்து அழிந்தானென்றீர்.
இத்தனையும் தெருக்கூத்து தானேயாகும்
இல்லையெனில் நூல்வழியை இசைப்பீர்மாதோ.

## பாட்டு.

பண்டிகையைக்கொண்டாடி வுன்முண்டாவைத் திருப்பச்
பாதகரே உன்குருவைக் கொண்டா கொண்டா [சொன்ன
பக்குவமாயுன்னைவிட்டு வெட்கம்கொண்டொளிந்திட்டாரா
பந்தாலெதிர் நாட்டுவேநான் ஜண்டா ஜண்டா
மண்டையுடைபட மதன்பொன்றினு னெனவேவந்து
மாச்சர்யமாகச்சொல்வதும் பண்டா பண்டா
மாலையிடவந்தேனுன்னை வேளெரியா நூலைகாட்டி
மனதில்கவனம்வை நன்று நன்று
ஒண்டிக்கொண்டி யாகக்குந்தி துண்டுதுண்டா பதில்சொல்ல
உங்கள்ஜமாவிலே திறம் உண்டா உண்டா
ஒலியெனும் மாரனெனும் உத்தமரே ரெண்டேதுகாண்
ஒன்றுமில்லைகாணும் பெருந்தண்டா தண்டா
பண்டுதாமேலேபேசாதே தண்டுதளத்தோடும்கூடி (பாதக)

நாளைமுதலின்றளவில் கோளங்கரே யிப்பண்டிகை
நாட்டிலேகொண்டாடச் சொன்ன தாரு கூறு
நாவலர்பாட்டைபடித்துக் கேவலமடையப்போறீர்
நாதவிந்துகாணுமக்கு வீரு வீரு
வேலையில்லாமலேதாங்கள் காலியாயிருந்துக்கொண்டு
வீம்புக்காக இந்தச்சபை நேரு நேரு
வீரனும்எரிந்தானென்று தாறுமாராய்க்கூறுதீர்காண்
விற்பனரேசபைவிட்டு பேரு பேரு
பாவலரே உங்கள்விழி சாளேஸ்திரம் போலிருக்க (பாதக)

இத்தலமீதினில்சிறு கொத்தாங்காய் கேள்விகேட்க
எங்கேகற்றுய்சிங்கமேநீ நில்லு நில்லு
ஏர்க்கசபையோரறியமூர்க்கரேஉன் கேள்விக்கான்ஸர்
இந்தாரும் தாரேனே வாங்கிக் கொள்ளு கொள்ளு

சத்தியமாய் சொல்லுதந்த சித்தர்கு வஜவிஜயம்
தன்னிலே பண்டிகையில்லே தள்ளு தள்ளு
தாக்கும்மன்மதப்படலம் ஜோக்காக எடுத்துப்பார்த்து
தலையில் தப்பட்டைதூக்கி செல்லு செல்லு
பத்துநாளாகிலும்விடேன் புத்தியுள்ளோரானல்சென்று (பா)

போதுமா சொல்லும் பத்தாதா வாதிஷ்டமகாமுனியும்
பூதலததிலுரைக்கிற சாக்ஷி சாக்ஷி
பரிபூரணமாகவேகேளும் வீரப்ராமணர் பண்டிகை
புகழாய்கொண்டாடுராரு காக்ஷி காக்ஷி
சாதுவா யறியாமலே மாதுபோ லழுவாயாகில்
சர்ச்சனர்கள் முன்னெடுப்பேன் மாக்ஷி மாக்ஷி
சம்மதமுண்டானல்பாடும் மன்மதனெரிந்தானென்று
ஷாகிருசெல்லாது உங்கள் பூச்சி பூச்சி
பாதுகார்த்துக்கொண்டிருக்கும்
கோதில்லாவேளில்லையென்ற (பாத)

அஞ்சாமற்கேளும் புலவா தஞ்சைநகர் தன்னில்வாழும்
அற்புதமாகிய கவி ருஜன் ருஜன்
ஆசைகவி உம்மைப்போலே பேசவந்தோர்களை வேரோ
டறுக்கும் ருமசாமி சிஷன் சிஷன்
கஞ்சமலர்திரிசையில் கொஞ்சுங்கிளி கோகிலம்போல்
காண்டீபன் ஸ்வாமிநாத நேசன் நேசன்
கட்டகம்செய்யவந்தாலும் பட்டாருமர்முன் சாயாது
கருத்தி விருத்திப் பாடும் ரேஷன் ரேஷன்
பஞ்சுபோல் பறக்கடிப்பேன்
நஞ்சுண்டோனெரித்தானென்றல் (பாதக)

விருத்தம்.

திங்களொளி போலிலங்கும் முத்தர் நூலை
தெரியாமல் கனைத்துபட படப்பாய்பேசி
அங்கஜனுக் காலயங்க ளுண்டோவென்று
அலறிமா ரடித்துயெனைக் கேள்விகேட்டீர்
சங்கரன்மால் தேவர்கட்கே யில்லாப்போது
ஷாகிருமன் மதனுர்தனக் கேன்சொல்லும்
உங்கள்மதி யிந்தவிதம் ஒடுங்கிஅய்யோ
உளரும்விதி என்னவழி உரைசெய்வீரே.

பாட்டு.

அங்கஜனுக்காலயம் எங்கேயாவதுண்டாவென்
றறைந்திடும் புலவீரே நீர்நில்லும்
அவனியில் சிவன்விஷ்ணு ஆலயம்தனில் தெய்வம்
அகமகிழ்ந் திருக்குதா நீர்சொல்லும்
கங்குல்பக லின்றிய வஸ்துவை
கல்லிலும் மரத்திலும் காண்நத்தி
கடவுள்மூர்த்தியாய் கரித்தாரென்று,
கரங்குவித்திடிலோ அதுமுத்தி
நங்கைபாகனும் லிங்கமா யெழுந்திட
ஞாயமுண்டோ விபரீதபுத்தி
நாவலரே சங்கராச்சாரியார் சொன்னமொழி
நவின்றிடக்கேளுங்காண் நெறிபக்தி. (அங்)

நன்னெறி விளக்கம்.

அடியற்ற மரம்போலே தெண்டனேது
அரகரு வென்றமொழிக் கர்த்தமேது
பிடிபட்ட கள்ளரைப்போல் கும்பிடேது
பேசாமல்|பற்பலவாய் பிதற்றலேது

கொடியிட்ட மாத்திற்கு சுற்றங்கேது
கோயிலென்றும் தீர்த்தமென்றும் குறிப்புமேது
வடிவற்ற பரம்பொருளை மனதில்வைத்தால்
வன்மையுடன் பெருவாழ்வு வாழலாமே.

பாட்டு.

மஞ்சுலவு முலகில் ஔவை வகுத்தகுறள்
மறந்துவிட்டீரோ சொல்லும் புலவீரே
மாசில்லா பட்டணத்து சுவாமிகள் சொன்னமொழி
மாறுபடுமோ ஐயா கவியோரே.
துஞ்சும்கல்லினில்தெய்வம் கொஞ்சமும் இல்லையென்று
தொடுத்துப் பாடிடும் செய்யுள் களில்நேரே
சொற்சுவை ஒன்றில்லாத குற்றமற்ற பொருளை
சோதிக்கத் திறமுண்டா கூர்வீரே.

பட்டினத்தடிகள்.

சொல்லினும் சொல்லின் முடிவினும்வேதச் சுருதியிலும்
மல்லினும் மாசற்ற ஆகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லினும் அன்பரிடத் திலும்மீஸ னிருக்குமிடம்
கல்லினும்செம்பிலுமோ இருப்பானெங்கள் கண்ணுதலே.

பாட்டு.

கொச்சையில்லாதுமூவர் அம்மானை தனைக்கண்டு
கொண்டானடிப்பவரும் நீராச்சே
கொற்றவரே கல்லினில் தெய்வங்க ளில்லையென்று
கூறியுரைப்பதுவும் நிஜப்பேச்சே
இச்செகமீதில்சிவ வாக்கிய ருரைத்தமொழி
யீலனும் நம்முள்ளே யிருப்பாச்சே
இலங்கும் பாம்பாட்டிசித்தர் ஞானமதி உள்ளானும்
இசைந்துயிருக்க யேன்வீண்பேச்சே.

முவரம்மனை.

தில்லையறியார் சிவத்தைக் காணறியார்
எல்லையில்லாப் பேரொளியில் எய்துவரோ அம்மானை
எல்லையில்லாப் பேரொளியில் எய்துவரேயாமாயின்
கல்லையுருவாக்கிவைத்து கைதொழுவாரம்மானை [ணம்மானை
கல்லையுருவாக்கிவைத்து கைதொழுதுநிற்பதுவும் கற்பனைகா

பாட்டு.

எட்டுவாரமாகிலும் விட்டுவிடுவேனென்று
என்னெதிர் பாடவந்தாய் கவிருயா
இப்போதாகிலுமிந்த கருத்திற்கு பதில்மொழி
எடுத்துரைத்துமே என்னை வெல்வாயா
கட்டுக்கதை யல்லகாண் பட்டம்பகல் போலெங்கள்
கலைபுகழ் வழியைநீ யறிவாயா
கணபதிதாஸன்செய்த நெஞ்சறிவிளக்கத்தின்
கருத்தைக்கொஞ்சமேனும் தெளிவாயா.

நெஞ்சறிவிளக்கம்.

உருப்படு செம்புங்கல்லும் உண்மையாய் தெய்வமென்றே
மருப்புனை மலரைசாற்றி மணியாட்டி தூபங்காட்டி
விருப்பமுற் றலைந்தாயந்த வினைமயல் விட்டுநின்றார்
இருப்பவர் நாகைநாதர் இணையடி பூஜிநெஞ்சே

பாட்டு.

திஷ்டாந்திரமொன்றுகேள் நாகூர்தன்னிலேமீரு
சாயப்பாண்டவர் பள்ளிவாசலிலே
தெய்வமகுத்துவங்கள் நடக்குதல்லவா எந்த
தெய்வம்நின்றிருக்குது சொல்லதிலே

இஷ்டரே திருப்பரங் குன்றம் மச்சமுனி
இருந்திடும்சமாதி மகுத்துவத்தாலே
இலங்கிடும் ஜுனையில் மச்சப்பெருமைதனை
இயம்பிடக்கேட்கலையா சொல்பதிலே

சிவவாக்கியர் பாடல்.

ஆடுகொண்டு கூடுசெய் தமர்ந்திருக்கும் வாறுபோல்
,தேடுகின்ற செம்பினை திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானும் நம்முளே யிருக்கவே
போடுபத்ர பூஜையென்ன பூஜையென்ன பூஜையே.

பாட்டு.

ஆகையினாலே கோயில்குளங்களினால்
ஆவதுஎதுமுண்டா நீர்சொல்லும்
அரன்முதல்தேவருக்கு ஆலயமில்லாப்போது
அங்கஜனுக்காலயம் என்புல்லும்
நாகைநகரில்வளர் கோவிந்தசாமியின்சொல்
ஞாயமோ ஞாயமல்லா விதைவிள்ளும்
நாளும்சித்தர்லிங்கமாய் முளைத்தாரென்று
நறைபோகர் ஜெனனசாகரம் கொள்ளும்

விருத்தம்.

மன்மதன் எரியாத நூலதனை
மாபுலவா சபையோர்கள் முன்னேகாட்டி
நன்மையா யதிலுள்ள அக்ஷரத்தை
நாவலரே அரும்புபோல் நானெடுத்து
பின்னமிலா தமிழ்மாலை யதுவாய்கட்டி
பேசிடுவே னுன்கழுத்தில் மாலைசூட்டி
இன்பமாய் மங்களமென் றிதனைக்கொள்ளும்
இணையில்லா நூல்வழியை இன்றுமாதோ.

பாட்டு.

எரியாதநூலதனை எடுத்துரைக்கவேண்டுமென்று
தெரியாமல்கேட்டவரே
தேடியோடி தஞ்சைநேரே
அரிய பொதிகை முனியும்பாரு
அளித்த சூஸ்திரம் உண்டுநேரு
விரிவா யாயிரத் தெட்டைபாரு
விளம்பும் மதனே எரியாசிரு அய்யா
அறிந்துப்பாரே—அவையின்நேரே
சரியாய்க்கூறே—சாக்ஷிநீரே

கொங்கணர்பூரணமும் கூறும் எழுநூர்தனிலும்
சங்கமாகப்பொழிகின்றூரே.
ஷாகிறு அதைப்பாரும்நீரே
மங்களமாய் பதினெட்டில்தேரும்
மகிழ்வாயுரைக்கும் சேதிநீரும்
எங்குமுன்னை இகழப்பாரும்
எழுந்து சபையைவிட்டுப்பேரும் அய்யா
பங்கம்போங்க—பார்த்துவாங்க
இங்குநீங்க—இதனையோங்க

காகப்பூஜண்டரின்நூல் கருத்தாகத்தொண்ணூறில்
ஏகமாகப்பொழிகின்றூரே.
இஷ்டரே யதைஎடுத்துப்பாரே
மோகமான் எரியலென்று
மொழிகுராரே உறுதிஒன்று
வேகமாக ஓடியின்று
வேர்த்திடாமல் பாரும்நின்று அய்யா

போகமுனியும்—புகல்நூலணியும்
யூகமுனியும்—உறுதிப்பிடியும்

சட்டமுனிகலைக்யானம் சாற்றுவதைக்கேளடுத்து
குட்டுகுட்டாய் யானெடுத்து
கூறுவேனுன் வாய்தடுத்து
திட்டமாயாயிரத் தைன்னூறதுவே
தெளிவாயுரைக்கும் நூலைமெதுவே
விட்டுவுந்தன் சேஷ்டையதுவே
விரித்துப்பாரும் கருத்துமிதுவே அய்யா
கட்டமாக—நவின்றுநீங்க
கலியோங்க—களரிப் போங்க

கருவூராரின்ஞானம்பாடி காட்டுவே னைம்பதைத்தேடி
உறுதியாய் நளவெண்பாசூடி
உரைக்கமதனே பெரிதாப்பாடி
சுருதிமொழியை யறியவில்லையா
சூட்டும்கவியை பார்க்கவில்லையா
ஒருவழியும் தெளியவில்லையா
உளரிவீழ்ந்து அழுகத்தொல்லையா
குருவைத்தேடி—குணமாய்ப்பாடி அய்யா
வருவீர்நாடி—வல்லவர்கூடி

சத்தியமாய் ரோமரின்று
சாற்றும் வைத்ய காவியமும்
வித்தகரே முன்காட்டியானே
வெற்றிக்கொடியை நாட்டுவேனே
நத்திகாகை நகரில்வாசன்
நவிலும் கோவிந்த சாமிசீஷன்
உத்தமன் கிருஷ்ண சாமிதாஸன்

உரைப்பேன் இராஜகோபால் நேசன் அய்யா
சுத்தப்பொய்வாவது—சிறுவன் மீது
நித்தமும் சூது—நிலைநில்லாது

விருத்தம்.

புவியதனில் வாதமொடு வைத்யஜோஸ்யம்
புகன்றனரே வசியமாந் ரீகமைந்தாம்
அவியமர விவர்களால் வெளியதாக்கி
அம்புவியி லுள்ளவர்செய் கிர்த்தியத்தின்
சவிஸ்தார மறியதிர மில்லாமற்றான்
ஷாகிரு மதனைசிவ னெரித்தானென்று
நவிலவந்த கக்ஷியது பொய்யதென்றே
நானுரைக்கும் கேள்வியுரை நன்மையாமே.

பாட்டு.

எதுங்காணுமென் நேரினில்வந்துகுந்தி
இருமாப்பாய் பேசிட்டீர் ஷாகிரு நெஞ்
என்னிடகக்ஷியின் பொதுவழிவிவாத்தை
இன்னமுந் தாங்க ளறியீரா
ஓதுநீர் திருமாலின்புதல்வநென் றொருவன்
உருவழிந்ததாயிச் சபைநேரா
உளராதே மலர்கணைதொடுத்திடும் மன்மதன்
ஒருவனு யுகத்திற்குப் பலபேரா
வாதுக்கழையாமல் கொடிபடைவில்கணை
வந்தவிபரமதை சபைநேரா
வழுத்தியஉங்களின் பிரபஞ்சத்திற்குரிய
வல்லமை புராணத்தை விரிப்பீரா
தீதுசெய்யாமல் கிருகஸ்தநென்றென்னை
திடமுடனேநீ ரறிவீரா

திருட்டுக்கவியினல் மதமதைகாமனென
தெங்கிஞபாடாதீர் மிகஜோரா. (ஏது)

வித்தையிற்றெளிந்த உத்தமர் முன்னிலையில்
விளம்புவேன் கேளுமொவ்வொன்று
விஸ்தாரமாயினி முன்பின்முரணுமல்
விவகரித்திடுதலே மிகநன்று
அத்வைதசாஸ்திர ஆகமவேதம்
அதிலுரைத்தாலும் சரியென்று
அன்பரே சுருதியோடுக்தி யனுபவம்
ஆதரிக்கத்தயார் முன்நின்று
இத்தனைவிதங்களி லெடுத்துப்பேசிட
இயம்பிஞா உன்குருவென்று
இல்லையாநீக்கி குரங்குப்பிடியாக
இயம்பப்போறீரோ பதிலின்று
கத்தாதேபலவித மறைந்திட்டநாரத
கவியுகப்புலவோரின் கதைபுகன்று
கவியோரே நாமம் ரூபம் ஸ்தானம்
காலம்பிரளாம லுரைப்பீரா. (ஏது)

நம்மிடகல்வி பிரசங்கமதனை
நாட்டிலுள்ளோர் பலர்கேட்பதற்கு
நாடியிருக்கிறுர் வெற்றிதோல்வியும்
நடுநிலையாக உரைப்பதற்கு
சும்மா அடிக்கடி ஆபாஸக்கேள்விகள்
ஜோடித்துகேட்டால் விடையதற்கு
சொல்லுவதழகல்லவென்று சபையதில்
சூட்டுவேன் ஜெயக்கொடி பாரிதற்கு
கும்மாளமிட்டு கூத்தாடியைப்போல்
கூச்சலிட்டாலே அதுநமக்கு

குணமில்லையென்று பலருமெழுந்து
கூறிப்போவா ரப்பெயரெதற்கு
விம்மாதே சகலரும் உணரும்படியாய்
விவகரித்தாலே நன்றிதற்கு
விருதாவாய்பாடி பொழுதுபோக்கியே
வீணரென்றபேர் பெறுவீரா. (ஏது)

கன்னல்ரஸமெனக் கவிமழைபொழிந்திடும்
கல்விமான்கள்சூழ் தென்தேயம்
காடைகௌதாரிமைனு பேடுடன்கூடியே
கல்விசெய்யும்நகர் திருநாமம்
சென்னெல்விளைகாந்தை பதியதிலென்குரு
ஜெகமெலாம்புகர்பெற்ற பெரியோராம்
செந்தமிழ் வெண்தமிழ் கருந்தமிழுணர்ந்த
செல்வன் இராமசாமி யவர்பேராம்
தன்னிலையறிந்து இவ்வுலகெலாம் ஜெயம்பெற்ற
தண்டமிழ் திரிசைபட்டாராம்
தரணிமுழுவதும் திக்குவிஜயஞ்செய்து
தங்கத்தோடாமெடல் பெற்றவராம்
இன்னிலம்புகழும் வண்ணையம்பதியதி
லெதிரில்லாசிங்கார வேலவராம்
இசைத்திட்டகேள்விக ளொவ்வொன்றிற்கும்
இராஜகோபால்முன் உரைப்பீரா.

விருத்தம்.

காடையொடு கல்பொருக்கி வானம்பாடி
கலிக்கையொடு பச்சைபுரு டேகையன்னம்
ஓடையதில் ஜாடைசெய்ய வக்காலக்கா
ஒய்யார மாய்திரியும் தஞ்சைநாட்டின்

மேடையதில்வாழும் இராமசாமி
மென்மதுர வாக்கதனல் மொழிந்தபாட்டு
வாடையது பட்டாலும் எரிந்தகசுழி
வலிகுறைந்து நிலைதளர்ந்து போகும்மாதோ.

பாட்டு.

சரிகைக் கிரிகை யோக ஞானந் தெளிந்தவர்போல்
சபையிற்பாடவந்த அங்கமே மனத்
துணிவதிகமுனக்காண் சிங்கமே வெகு
சாதுவாய்க்கல்வியோதிடும்புவி மீதினிலொரு சூதிலாமலே
சம்பாதாய்ப்பத்தரைமாத் தங்கமே நில்லும்
பம்பரம்போலாடிவந்த ரங்கமே
வருகையிலே ஜமா திரண்ட முடுக்கைப் பார்த்தால்
வாரம் பாடுவீர்போலக் காணுது பலே
நோம் பரவாயில்லை தோணுது இந்த
வையகம்தனில் பொய்யைத் தள்ளியே
மெய்யா உரைத்திடும் அய்யாவே சில
வாய்ப்பந்தல்போடாதீர் காண வேணது சர
மாரிப்பொழியுமுன்ன லானது
இருகை ராவணரேஉன் திறமை கண்டறியநான் [லால்
இடிபோலிடிக்குமோஉன் பாட்டெல்லாம் இல்
பிடிஎன்றெழுத்துகம்பி நீட்டலாம் இங்கு
இசைதனைமுனை அசைசீர்கள் மசமசவெனப் பிசகாகில்
லகுவில்விடாதுஎங்கள் சீட்டெல்லாம் உம்மை
டகுலக்கொடுக்கும் பின்னல் கோர்ட்டெல்லாம்
எந்தன்சமுகம் பாடும்புலவீரே பாட்டில்
எமுகம்பராசத்தொடு கூறே
ஆனலிருந்து கேளும் மாநகம் போலேவந்து
தானய்ப் பறையடித்த வாதியே இப்போ

நானுப்புகல்வேனொரு சேதியே உந்தன்
அன்னை தந்தையும் ஒன்ருய்க்கூடாமல்
தன்னைப்பிறந்தாயா மண்ணுலகினில்
அப்படிக்காணுலும் நூலைப் போதியே பாட்டில்
செப்பியே பாடிடும் ப்ரைக் யாதியே
கொ-ங்-க-த-ன-மா-வ-ந்-து கொளிக்குறீர் அந்த
அங்கஜனையும் வீணைப் பழிக்குறீர் வெகு
கோடிபேர் மதன் வாடிஞனெனப்பாடி
என்முன் ஓடிஞர்காண்
கொப்பறைப்போல் பல்லேயிங்கு இளிக்கிறீர் வெகு
டம்பமாய்க்கண்ணையுருட்டி முழிக்குறீர் எந்தன்
சமுகம்பாடும் புலவீரே பாட்டில்
ஏமுகம் பாரசத்தொடுகூறே.
இரவுக்கலை யறிந்து மருவுக் கடவுளாரு
பறவைக்கடிதொழாமல் நில்லுமே நான்கு
மறைகண்டெழுந்து என்னை வெல்லுமே அந்த
ஈசனல்மதன் நாசமென்றுமேபேசிடும் விஸ்வாஸரே அண்ணே
இந்தமெட்டாகவே பதில் பாடுமே அந்த
கந்தப்பனெரிந்த பேச்சை தள்ளுமே
கருவுக்குடையளியும் உருவைக் களைவதேதுன்
குருவைக்கொண்டுவா உன்னு லாகாது செவியில்
விரிவாய்க்கேட்டுவா மோகம் சாகாது
காமனல்படும் தீமையாவுமே கண்டமுர்த்த ஜண்டமாமே
கக்ஷிக்கிசைந்தபடி ஏலாது மனதி
லச்சங்கொள்ளுங்காண் சங்கம் வேகாது
எந்தன்சமுகம்பாடும் புலவீரே பாட்டில்
எமுகம் பராசத்துடனேகூறே
அகிலமதிலே ரேஜா மயிலும் வாயினல்கௌவி

ஓயிலாய்சிறகை விரித் தாடுமே கண்டு
குயிலிந்துஸ்தானி இராகம் பாடுமே
ஆளிகாளிநிர் தூளிமேற்பட காளியாவுமை நாடிட
அஞ்சலாய்வளரும் தஞ்சனே வாசனே சாலை
மஞ்சலர்படர்ந்தபதி நேசனே
வெயிலை மறைந்திடுங்காண் முகில்போல் பிரசங்கவிர்த்தி
பயில்வான் இராமசாமி தாசனே திரி
ச்சையில் தோடாபெற்ற நேசனே மதன்
வெந்ததாகவே பந்தயமொடுவந்தபேர்களைசிந்தைப்பட
வெட்டாலே தடுக்கும் பிரகாசனே எங்கள்
பட்டாருமரொன்றறிவாய் மோனனே எந்தன்
சமுகம்பாடும் புலவீரே பாட்டில்
எமுகம்பராசத்துடன் கூறே.

விருத்தம்.

கோகிலமும் கொக்குவக்கா நாரைக்கண்டு
கும்பல்கும்ப லாய்கிளம்பி ஊரைத்தேடி
போகுதுபா ரன்னமின்னம் தடாகம்கான
பொய்கையிலே வந்திறங்கும் திரிசைநாட்டில்
ஏகிவளர் எந்தன்குரு பட்டாராம்
எழிலடியை என்னாளும் மனதில்சூட்டி
யூகிகளா உண்மையதை வெளியாக்க
உற்பவித்தேன் இராஜகோபா லுணர்வீர்மாதோ.

பாட்டு.

ஞானவெட்டி நூலறியா கியானமில்லா கனவானே-
நில்லுங்காண்போகாதே —ஓய்
நில்லுங்காணோடாதே ஓய் - நில்லுங்காண் உங்கள்

நாவாலெனக்குப் பதில்சொல்லுங்காண்
மோனமற்றயீசருக்கு முருகருரைத்த பொருளாதியே
நல்லமுச்சுடராய்நின்ற பரஞ்சோதியே [உ - உ
ஆணும்பெண்ணும் அழிவில்லா அரூப
மன்மதனென்றஜோதியே—ம - ம - வேத
மறையுமரையுதுபார் நீதியே
(உத்) நானுஜீவவாதம் பாரு அதில்
நம்பியென்சொல்லைக்கண்டு தேரு
க்யானசாஸ்திரமா ஞானமில்லாகனவானே. (நில்)

தத்துவங்கள் தொண்ணூற்றாறும் தானாய்
தொழில்நடத்தும் மாரனே—தொ - தொ
ஈசன்கண்ணாலெரித்ததும் பொய்தீரனே
சித்தஜனை ஆதியென்றுதக்ஷனை
மூர்த்திசொன்னகாவியம்—மூ - மூ எங்கும்
தேடக்கிடையாத பெருந்திரவியம்
(உத்) உற்றுப்பாரும் அறிவாலே இந்த
உலகம்தனிலே முன்னாலே
நத்தியேமானைப்புணர்ந்து
புத்திரனைப்பெற்ற சிவன். (நில்)

ஔவையார் முன்னுலுரைத்த ஆதியான
மூதுரையே நூல்பாருமே—மூ - மூ சிவன்
அய்யம் எடுத்தவிதம் கூறுமே
செவ்வையா யரன்சிரசில்
தெரியஎழுதினவர் யாருமே—யாருமே அவர்
ஜெனித்தது மூங்கல்கண்டுதேருமே
(உத்) ஔவா தருணஜலப்புராணம் அதில்
உரைக்குதே யீசன்கல்யாணம்
நவ்வைவடிவுடையநாதனு மெரித்தானென்றீர். (நில்)

பஞ்சலக்ஷணங்கள் கற்றபாவலர்
போற்றும்கவிராஜனே—போ - போ இந்த
பாரில் பட்டாராம் பிரகாசனே
நெஞ்சில் கவனம்வை
நேசன் சிங்காரவேல் சிஷனே—சி - சி வித்வ
நேர்மையில் இராஜகோபால்தாசனே
(உத்) வஞ்சியர்பாலே மயங்காதே உங்கள்
வம்பு என்னிடம் செல்லாதே. [டும் (நில்)
நஞ்சுண்டோ னெரித்தானென்றால் நரகம் உனக்குகிட்

விருத்தம்.

உலகமதிற் கலகமது செய்வதற்கு
ஒன்றிருக்க ஒன்றைபற்றிப் பேசலாமா
பலதெய்வம் பலசமயம் வகுக்கலாமா
பராபரத்தின் நிலையுணரா தலையலாமா
குலம்தனதே இன்னதென அறிந்திடாத
குடிகேடர் மொழிகளையே நம்பிக்கொண்டு
புலனறியா திச்சபையில் பேசவந்த
புலவருக்கு வேதாந்த சவுக்கிதாமே.

பாட்டு.

மாரனெரிந்தானென்று தீரமாய்சொல்லிவந்த பேச்சே-இந்த
மண்டலத்தோரறிய மறுத்துக்கை கழுவலாச்சே
ஆரணத்திற்காதாரம் அத்வீதக்கடை விரிச்சாச்சே—உனக்
களித்தகுருவினாலும் அசைக்கமுடியாதிந்தப் பேச்சே
(உத்) தோரணவயர் நூலறிவீரே தத்வம்
தொண்ணூற்றூர் ஞானமதைப் பாரே
வாரணங்கள்திரண்டு
வந்தாலும் சிம்மத்திற்கோர் வீச்சே இந்த (மண்)

விருத்தம்.

பராபரமாய் ஒருமுகமாய் பாதியாகி
பரவெளியாப் எங்கும்முப் பாழுமாகி
தராதலமாய் தானுகி சர்வம்ஒன்றே
தாங்குமந்த மோகவெள்ளம் கடந்தோரில்லை
சுராதிபர்க்கு மெட்டாத சோகம்சோகம்
சுவையற்று லவையல்ல சுடாதுமாச்சு
புராதனமாய் சொன்னதடா போகர்பிள்ளை
பூர்த்தமலர் வாயடங்கா வாசம்போலாம்

அகவல்.

அகஸ்தியர் இருபது ஆயிரத்தெண்ணூறு
புலஸ்தியர்க்காக போதித்தபடலம்
தொடுத்துமேஎழுபத்தெட்டில் சுணங்கிலையென்றபாட்டில்
அழுத்தமாய்சொன்னரிதை ஆக்ஷேபிக்காதே அய்யா

பாட்டு.

[கொஞ்சம்
சேத்தில்நட்ட கம்பம்போலதியங்குதே உங்கள் மனமாற
சிந்தாமலேசந்தணம் திமிரிகொள்—கோபமெல்லாம் தீர
ஊத்தைநாருதே புராணபித்தலைத்திறந்துநான் கூற—அதில்
உபயோகமில்லையந்த சமயாதிகள் மனம் சோர
(உத்) சோத்துக்கும் துணிக்காகப் பாடி —முன்னால்
சொல்லிவைத்தாரே கையை மூடி
மாத்திப்பேசாதே உங்கள்
வாத்தியாரெனக்கிஷ்ட மாச்சே —இந்த (மண்)

அகவல்.

சந்தணமுனிவர் சாஸ்திரம் முப்பது
முந்தவேயேட்டில் முடித்துள்ளா ரிக்கவியை

அந்தரமானீர் அய்யய்யோ பாவம்
வந்துமேஎமன் வலிப்பதுபோல் நானுனேனே.

பாட்டு. [கள்

ஆலைவாய்க்கரும்புபோல் ஆட்டுவேனெந்தன்கவி யாலே—உங்
அமுக்கு குமுக்கை யெல்லாம் அறிவேனேயிந்தசபை மேலே
வாலைநீட்டாதேசும்மா வையகமறிமாரன் செயலே—இனி
வாயைமூடிக்கொண்டோடு
வலுவுண்டோ எந்தன் கவிபோலே
(உத்) சேலைகட்டிய மாதாய் நீரே சபையில்
சின்னமடை யலானீர் பாரே
மாலையிட்டுமேஉன்னை
மருக அசங்யமுண்டாச்சே—இந்த (மண்)

காக்கையர் தம்மி.

பிர்மத்தில் தோன்றிய மாயாசத்தி எட்டில்
பெற்றவன் செத்தானே சித்தஜனே
கர்மத்துக் குள்ளாக்கி வைத்தவன் பேயண்டா
காரண மல்லவே காக்கையனே
சத்துசித்தானந்த வித்துக்கு முத்தான
சத்தைத் தணலா யெரித்துவிட்டால்
எத்தைக்கண்டு உயிர் வாழ்வதப்பா அதை
எண்ணிப்பார் கண்மணி காக்கையனே.

பாட்டு.

போட்டேனுனக்கு குல்லா
மாட்டேனென் றெழுந்தோடாதய்யா சுக்கு
பொடிமயக்கத்தினுலுன் கொடியையறுத்தவும் பொய்யா
சாட்டையிதென்றுஒய் பூட்டகமறியாத துய்யா
சால்சமுக்கடி குமுக்கடி தமுக்கடி ஜெயிப்பே னைய்யா

(உத்) கோட்டை பிடிக்கவந்த புலவா —ஞானக்
குறடா கொடுத்தே நானல்லவா
வாட்டம் கொள்ளாதே உங்கள்
பாட்டன் நாளையிலிந்தப் பேச்சே —இந்த (மண்)

தேவாரம்.

ஆறுவரைஏறிவரும் வாசிபரிமாறிநிலே அங்குவூதி
தேருவனோதோரானே தேனினொடு பால்கலந்து தெளிந்த
[யோகி

அகவல்.

அத்விதத் தேவாரம் அன்பத்தோராங்க வியில்
சுத்தப் படிகமென சொல்லிவைத்தார் கௌசிகரும்
இத்தைநீ யறியாமல் ஏனமூதாய் சபைதனிலே
பெற்றுலல்ல வோதெரியும் பிள்ளையின் தன்னருமை

பாட்டு.

எத்தனைபேர் வந்தாலும் என்னை ஜெயிக்கமுடியாது—பின்னால்
இருக்குதே தபோதனர் இயம்பிய கற்பனைகள் மீது
சத்தியமாக நீங்கள் சபைக்கியினி வருவ தேது —மெத்த
ஜாலம் செய்தாலும்விடேன் தலைகுனியாதே நிமிராது
(உத்) செத்தவன் பிழைப்பதுண்டா சொல்லு —உம்மை
சிரிக்குறார் சபையோர்கள் நில்லு
வத்த வடகநள்ளி
கொத்தமல்லிபுராணமாச்சே—இந்த (மண்)

திருப்புகழ்.

எள்ளிடம் மேவியிருந்த எண்ணைபோல்
கள்ளிமயக் கத்திலுள் ளொளிவாகி
தள்ளிவிழுந்தெழு நாதமும்தீபட உரையாதே

மறைவழியாக சிலநூல்கள் வகுத்தனர்
குறைவது என்னுதலைகிழ் கொட்டினர்
புரைபுரைஎன்றே மண்மேல் பொக்கினர் விருதாவே

பாட்டு.

தாமரையிலையில் நீர்தத்தளிப்பது போலானீரே —அந்த
சங்கராச்சாரிசொன்ன தத்துவம் தொண்ணூற்றுரைப்பாரே
பாமரத்தின் மேல்காக்கை பறந்துசுழல்வதுபோல் நீரே-பஞ்ச
பாதகத்திற் காளாகி மீளாநரகில் விழுவீரே
(உத்) மாதம்மூன்றுகிலும்பாடு சற்றும்
வலுவில் குறையாதிந்தக் கூடு
வாதம்வூதி தான்கெட்ட
காதலர் கணக்கதுமாச்சே இந்த (மண்)

தில்லாலே.

யூகிமுனி சொன்ன நூல்முழுதும்
உரைக்கும் மதனே பெரிதாக
போயிப்பார் மானே தஞ்சை அரண்மனை
புகலும் சாஸ்வதி மால்கேட்டு
காகிதமல்லது கூந்தற் பனைபோலே
கரையா னெரித்த சுவடியது
ஏகிப்பார் எழுவத்தி எட்டில்
யீசன் மாரனை எரிக்கவில்லை

பாட்டு.

பாரோரறியயிந்த பரந்தசபையில்வந்த புலவா —வெகு
பக்தர்கள்சொன்னமொழி சத்தியமாயறிந்து தெளிவா
வீராதிவீரருடன் சூரர்ஜெனித்த தெதினுலே —அந்த
விர்த்தாந்தமதையிப்போ விவரித்துசொல்லும் சபைமேலே

(உத்) சோமல்வந்து ஜெனித்தாயா நீயும்
செப்புவாய்சபையில் வீண்வாயா
பாராதே திரும்பி நீயும்
பயந்து ஓடுங்காலமாச்சே — இந்த —(மண்)

வேறு.

சர்வசாக்ஷியாகச் சொல்லுமே நானும்
தந்ததற்குத் தாரம் புல்லுமே உந்தன்
கெர்வமது வெல்லாம் தள்ளுமே என்னை
கெம்பீரமாகவே கொள்ளுமே
கண்டுதேர்வேள் பரிபூரணம் அந்த
கைவல்யம்பார்த்து நிவாரணம் இதைக்
கெண்டுதல் பண்ணியே தீரணும் கொஞ்சம்
கொள்ளும் உமக்கிதுசூரணம்.

பாட்டு.

மஞ்சலர்சோலைசூழும் தஞ்சைகரந்தைபதிவாசன்
மாமகுத்துவம்பொருந்திய மகிபன் இராமசாமிசிஷன்
கஞ்சமலர்வதனரஞ்சித சிங்காரவேல்நேசன் உந்தன்
கருத்தைப்பிளக்கும்சிறு இராஜகோபால்பிரகாசன்
(உத்) பென்ஷன்கொடுத்தே னுனக்காக ஜல்தி
பிரளாதே சலாம் வாங்கிப்போக
வஞ்சகமாகக்கூடி
வாதாடவந்திரிந்தபேச்சே—இந்த (மண்)

விருத்தம்.

கடல்சூழ்ந்த புவனமதில் ஸ்மிருதியுக்தி
கசடறவே அநுபவத்திற் றெளிந்தோர்போலே
படபடப்பாய் கருவுதிக்கும் மார்க்கம்தன்னை

பகரவந்த கவிராயா போதும்போதும்
ஜடமதனை உரைப்பதுதான் பெண்கள்மார்க்கம்
ஜீவனது எப்படித்தான் சேர்வதின்னம்
திடமுடனே ஸ்தனமதனில் பால்தான்பொங்கும்
திறமதனை அறிவிப்பீர் சபையில்மாதோ.

பாட்டு.

கோடையிடியுடனே குமுறிவருது பெருங்காற்று—உங்கள்
குமுக்கான ரயிலதை அமுக்கிநொருக்கக் காலம்பார்த்து
வாடைதிரும்புதிதோ ஓடவுமக்கு நேரமாச்சு —முந்தி
வண்டவாளங்களெல்லாம் பிண்டோற்பத்தியில்வெளியாச்சு
ஏடதில்எழுதிநீர் பாடம்படித்தீர் முழுவீச்சு —அதில்
என்னரஸங்காணுண்டு சொன்னகவிபுறளியாச்சு
(உத்) ஆடையில்லாத மங்கைபோலே —வீணுப்
அழுகிறீர் சபையோர் முன்னாலே
கூடவேஎஞ்சினதை ஓடவிடாதுசுழல்காற்று—உங்கள் (குமு)

கேட்டுதாஉன்செவியில் பாட்டிதன்கருத்ததுவிண்டு
கிளைக்கதையதைவிட்டு துலக்கிடவேணும்ஞானமுண்டு
சாட்டையின்றிபம்பரம் ஆட்டஎனக்குசமர்த்துண்டு
சர்தார்கூட்டமெல்லாம் விருதாவாய்போகவே வெகுண்டு
(உத்) ஒட்டைகவிக ளுதகாது —பின்னால்
ஒழுகிப்போனல் சபையில்தீது
வாட்டங்கொள்ளாதே உடன்
வருகுதத்வைத ஜண்டக்காற்று உங்கள் (கு)

பாடாதேபாட்டுக்கு பாட்டுபதிலெனத்தானே —இங்கே
பலரும் புகழ்ந்திடகேள்விக்கு விடையதைஊனே.
ஆடாதேசபையதில் அடிப்பேன்கவிசவுக்கில்நானே--உங்கள்
ஆசான்மார்களெல்லாம் அஞ்சிபயந்தொளிந்ததேனே

(உத்) வாடாதே யிதையினிகேட்டு —கவி
வாணரே டேப்பதைப்போட்டு
ஓடாதேதுரத்தி புறட்டியடிக்கும்பெருங்காற்று—உங்கள் (கு)
மல்லிகைமுல்லைவளர் மங்களவண்ணைநகர்வாசன் —ஞான
மகுத்துவம்பொருந்திய சிங்காரவேல்துரைசிஷன்
சொல்லிவைத்தார்கவி சுருதிவழியுணர்ந்ததாசன் —சோதி
சுடரொளியாகவே இராஜகோபால்பிரகாசன்
(உத்) தொல்லைப்படுவீரினி அண்ணே —இதோ
தும்ஸப்படுத்துவே னுன்னை
பல்லையிளிக்காதே ஓய்
பின்னால்வருகுது பெருங்காற்று —உங்கள் (குமு)

விருத்தம்.

எண்ணரிய உபவாச அனுஷ்டானங்கள்
எம்மதமும் சம்மதமென் றேத்தும்போது
அண்ணலவர் தவமதனை யாலின்கீழே
அழித்திடவே முனைந்ததி ஞலேநெற்றிக்
கண்ணதில் நீரானன் மாரனென்று
காட்டுகிற ஆட்டமதைக் காசினியோர்
நண்ணுவது மில்லையேன் நல்லோர்தாமும்
நாவலரே உடனெடுத்து நவிலுவீரே.

பாட்டு.

அங்கஜ னெரிந்தா னென்று பொய்வாது
யாருங்காண் பேசினது
அவனியி லெல்லவரும் கவனித் திருக்கத் தர்க்கம்
ஆகுமா சபைமீது
எங்கும் இல்லாமல் தாங்கள் எடுத்தப் பண்டிகைதன்னில்
இவ்விதமான வாது

ஏனே வருகுதென் றுன்மனக் கண்ணைத் திறந்து
எழிலாகப் பாரிப்போது
திங்கள்முன் மின்மினி போல் வந்தென்னை எதிர்த்து நீ
தினமும் செய்குராய்தீது
தெரியாதோ அய்யா மகா ராஜாபினல் கோட்
தெளிவாயிருப்பது
(உத்) பங்கப்படுவாய் புலவா பல
பேருமறிய பலவா
அங்கமுள்ள சிவனும் அருபி யானமதனை
அழித்தானென் றுன்வாது (அவ)

பாரிந்தப் பண்டிகை நிஜமாகி லுங்கள் குரு
பிராமணரிதை யெடுத்து
பக்தியுடனே நட்டு சுட்டுக் கொளுத்து ரூரா
பகருவீர் பதில்விடுத்து
ஆரியர் வாணிபர் சன்மார்க்க ருத்தியோ கஸ்தர்
யாவருமிதை தொடுத்து
அம்புவி தனிலென்றும் கொண்டாடி வாரூரா
அறிந்தாலே விடைகொடுத்து
(உத்) மீறிப்பேசாதே அய்யா நூல்
மார்க்கமதனிற் பொய்யா
தேரிஉங்க ளின்கக்ஷி தெருவினில் நின்றழுக
தேடிச்செய் தீரேவாது (அவ)

குடியர் வெறியர் பொல்லா தடியர் மடையர் ஞான
குருடர்க ளெல்லாம்கூடி
கொட்டை முட்டையை நட்டு சுட்டுக் காம னெனவே
குறித்தழுது மேவாடி
துடிதுடித் துமேசெய்யும் துர்க்குணங் களைநூலின்
துறையறிந் தவரோடி

தும்ஸப் படுத்தி யெங்கும் தூற்றி யடித் திருக்க
துராக்ருத மாகப்பாடி
(உத்) விடியும்வரையில் நீரும் விண்
வாதுசெய்யாதே கூறும்
படிமிசை தங்களிட பாட்டன்நாளை யிற்செய்த
பண்டிகை யெனவாது (அவ)

கூசாமற் பிச்சைவாங்கி குடிக்கும் வெறியர்செய்த
கோலைநிஜமாய் கொண்டு
கூத்தாடும் உங்களுக்கு முகத்தில் மீசையெதற்கு
கூறுவீர் நூல்கண்டு
பேசாதே பின்னையொன்றும் ரோஷவா னுகிலிந்த
யாசகத் தொழில்தொண்டு
பேதைகள் தனைவிட்டு பிரபல்ய வானுமெங்கள்
புண்ணிய ரிடம்விண்டு
(உத்)பாஸாக வேணும்கோடி பாதர்
சிங்காரவேலைத் தேடி
ஆசான்இராஜகோபால் அறிவிக்கும்நற்கவியை
அறியாத தென்னநீது (அவ)

விருத்தம்.

ஆசைதனை விட்டவரா ரகிலமீதில்
அரனயன்மால் தேவர்களு மடைந்தசாபம்
ஓசையிட முன்னோர்க ளுங்கள்நூலில்
ஓதிவைத்த சரிதையெல்லாம் பொய்யதாமோ
மீசைதனை முகந்தனிலே வைத்துக்கொண்டு
மிக்கபல வான்களென் றெங்குங்கூடி
காசைமிக பெரிதெனவே சுற்றுமுங்கள்
கக்ஷியது முச்சிதமா மிச்சைதானே

பாட்டு.

ஆசைநேச விஸ்வாஸ முடையோரென் றழுகாதே
மெள்ளநழுகாதே—பொய்யைப்புளுகாதே —முத்தி
ஆசைகொடுக்கு மாரன் நாசமடைந்தானென் றறையாதே
சபையி லிரையாதே
பாஸமகற்றியப் ப்ரகாசம் ஜொலிப்பதெங்கே பதியேது
சொல்லும்விதியேது—ஞானமதியேது —மோன
பரமானப் ப்ரமத்தில் பிரதிபலித்ததென்ன பயில்வானே
சொல்லித் துலேவானே
மோசம்போகாதே சுத்த தேஜஸான ப்ரம்ம முதலெங்கே
மாய்கை தணிவெங்கே—வேதமுறையிங்கே—தாங்கள்
முன்பின் அறியாப்புராண வம்பெடுத்துரைக்கிற முயல்தா
கெட்ட செயல்தானே [னே
வாசக்கடலெழுந்து ஓசையுடனேயன்று அலேவீசி
வந்தகலேவாசி—நல்லநிலேயோசி முத்தி (ஆ)

ஜீவேசம் சத்தியில் ஆபரண சத்தி தீபட
மாய்கைமேலிட—அறியாமட மையல்
சிதறி யலறியதில் மாரனுலீசனும் செத்தானே
பின்புதித்தானே
மாவேந்தர்புகழ்பெற்ற காவேரிநதிசூழும் வளத்தோனே
கவிபலத்தோனே—சொன்னநலத்தோனே இதை
மறுத்துரைத் திடஉங்கள் மகுத்துவ குருவிங்கு வாலாமே
விடைதாலாமே
நீவேறுதித் தாயோ பூவேளரு ளின்றி பித்தரே
ஞானசித்தரே - க்யானமுத்தரே வித்வ
நீதவானென்குரு வாயலில் நின்றினி வணங்குமே
கண்டா லிணங்குமே முத்தி (ஆ)

ஆவேசம்கொண்டென்மேல் ரோஷங்காட்டவந்தீ ரதிலேதே
ஞாயம்உதகாதே—கக்ஷிபதமேதே—முத்தி (ஆ)

பாவம்பாவம் நீங்கள் கோபப்பட்டால் பாட்டு பாடுவீர்
ஜமாகூடுவீர்—எதிர்நாடுவீர் எங்கள்
பாதர்சிங்கம் சொன்ன வீதாயம் தெரியாத பசலேயே
பதில்வரலேயே
ஆவலொடு கக்ஷி அறியாமல் பாடிநீ ராடுறீர்
முகம்வாடுறீர்—எழுர்தோடுறீர்
ஆகாதுங்களாசான் புத்திக்குறைவதுதெரியுமா வெற்றி
மதிவிரியுமா
சாவதானமாக நூல்கள்பயிலாத சங்கமே
வித்வதங்கமே—படுவாய்பங்கமே ஓடி
சற்குணவான்களின் நற்பதம்தேடிட நாளுமே
மொழிகேளுமே
நாவலர் பாட்டதை கேவலமாகவே கொண்டீரு
பதில்விண்டீரு—தமிழுண்டீரு முத்தி (ஆ)

தென்னங் குலேசிதறி தண்ணீர் பெரும்பொய்கை சேல்மேய
வாளேமேல்பாய—மடைகால்சாய திரு
தேவியருளதால் சொர்ணம் விளேந்திடும் செயல்பாரே
கக்ஷி அயலாரே
கன்னற்சோலே யிற்குயில் உன்னிதமாய் கூவகனகமே
முத்திவிளேயுமே—செல்வமதியுமே பொய்கை
கஞ்சமலர்மீதுமிஞ்சியே ரீங்காரம்காட்டவே
மதி யூட்டவே
நன்னயமுடனதிதுன்னக் காவேரிகொள் ளடமாமே
இரங்கர்தடமாமே—திரிசையிடமாமே பெருகும்
நலமான இரதகஜ துரகபதாதி சூழ் நற்சோழன்
நகர் பொற்பாலன்

சென்னையிலோதிட உன்னிதமாய்இராஜகோபாலன்
செல்வகனலோலன்—தமிழுரைசீலன் முத்தி (ஆ)

### விருத்தம்.

மன்மதனும் பிறந்தெரிந்து போனதாக
மாபுலவோர் சபைதனிலே உரைக்கவந்தீர்
நன்னயமாய் அதனில்பல சந்தேகம்தான்
நாவலரே நீரெடுத்து புகலுமென்றால்
இன்னவித கக்ஷியென் றறிந்திடாமல்
இயம்புகின்றீர் வினுமொழியை வீரமாக
வின்னமின்றி விணைமுடிவை தாங்கள்காட்டி
விருதுபெற வேண்டுமிந்த சபையில்மாதோ.

### பாட்டு.

பிறந்தா னெரிந்தானென்று பேசும்புராணமதிற்றானே
பொய்யெனக்காணே
சாக்ஷிபெறயானே
சபையில் வந்தேனே உங்கள்
புதுமையான நூல்புரட்டைக் கண்டுகனவானே
உறமில்லாத வேதவியாசன் விகடங்கள்தானே
உண்மையல்லக்கோனே
கோட்பாடு சிமானே
குறித்துவைத்தார் வீணே இந்த
உலகம்மயங்கப் பலமதங்களைப் பிரித்துப்பூமானே
(உத்) மறதிக்கொள்ளாதே இதைக்கேட்டு மதன்
பிறந்து எரிந்த நூல் காட்டு
திறமையாக யிதைப்பேசும் புராணமதிற்றானே (பொய்)

ஆதிசொரூபபிர்மமல்லா துலகந்தனிலேது
அரனென்பதும்வாது

வைஷ்ணவமும்தீது
வழங்கும் சைவமீது
அறையும் சூர்யசந்ர ஜோதியதுவும் தப்பாது இன்னும்
ரீதியாகுமந்த புத்தமத மென்பதும்சாது
நிக்ஷயம் நில்லாது
சங்கரரின்வாது
ஜைனமதையோது இஸ்லாம்
நினைவிற்கிருஸ்துவும் கொள்ளாது
(உத்) சோதித்துரையு மெதுபெரிது தெய்வ
சூக்ஷ்மதை யறிவதரிது
ஓதியிதையெடுத்து பேசும் புராணமதிற்றேனே (பொய்)
சமயமீராறும் சண்டைக்கிடமாகுது பாரு
ஜாதியொருவாறு
நூல்களதின்சீரு
நட்பமெனக்கோரு
சரித்திரமதையினி விரித்துவிடுவேன் னதிற்றேரு சாற்றும்
அமரர்துயரந்தீர்த்த ஆறுமுகப்பெருமான் சீரு
அன்பரேகூறு
பிரணவத்தின்ஜோரு
பிதற்றுதேநேரு அறிந்
தாறுதாரமெனும் ஆந்மலக்ஷணத்தின்பேரு
(உத்) நமசிவாய மதுவுமென்று ஓமுடன்
நவிலும் சடாக்ஷரம்முன்று
கமலகரமெனபேசும் புராணமதிற்றேனே (பொய்)
மாமலர்தேன்சொரி மாநாகை நகரதில்சீலன்
மதுரகவிலோலன்
எரிந்தகக்ஷிக்காலன்
எங்கள்துரை வேலன் ஞான

மருத்துவம்பொருந்திய கோவிந்தசாமி யருள்பாலன்
பூமணக்கும் கவிபொழியும் சிங்காரவேலன்
புலமையினில்லோலன்
இன்பதமிழ்சிலன்
இராஜகோபாலன் இந்த
புவியிலுங்களை பங்கஞ் செய்யவந்த காலன்
(உத்) ஜாமத்துரோகிகளா நில்லும் எங்கள்
சர்தார்கவியை உட்கொள்ளும்
காமனெரிந்தானெனபேசும் புராணமதிற்றுனே (பொய்)

விருத்தம்.

விலையில்லா மாணிக்க மாகுமந்த
வேதாந்த சாரமதை வீணர்முன்னே
அலைகடல்போல் கோஷித்து அறைந்திட்டாலும்
அறிவாரோ புனுகுமணம் அவனிவேடர்
கலையறியார் உரையுணரார் கல்வியென்ற
கருணையதை தான்பெறு கசடர்தாமும்
இலைமறைவு காய்பசுமை இருக்குமென்ற
இயல்புரைக்க இதுவுமொரு காலந்தானே.

பாட்டு.

ஜெகமுழுதினும் கவிகொட்டி வென்றுவந்த
செந்தமிழ் புலவீரே
சிறுவனென்முன்னே உங்கள் குருவானவர் வந்தா
ஜெயிப்ப தருமைபாரே [லும்
பகலவன்முன்னே பனிக்கூட்ட மெதிர்க்குமாமுன்
பாடிய பாவலோரே
பராபரமாகிய பிர்மத்தின் செயல்கொஞ்சம்
பகருவேன் கேட்பீரே

யுகமதுநாலிற்கு முந்தியே இருளது
உலவிய தால்பாரே
உருவில்லைஜீவநல் செத்ததாபரவஸ்து
ஒன்றில்லை தெரிவீரே
(உத்) தகதகவெனஜோதி தானதுவோங்கி
தாவிஜொலித் தாகாயவடிவமாய் விளங்கி
ககனமதில்நின்று—காற்ரூய்—உலவியபோதன்று
அகமதில் நினைந்துமே ஆயிரத்தெட்டு—நல்ல
அண்டங்கள் படைத்ததுவே
அன்பரே இருநூற்றி இருபத்திநால்புவனம்
அப்பால் சமைந்ததுவே

விருத்தம்.

சத்தசா கரமுதலாய் சமைத்துப்பின்பு
தானதுவாய் ஓங்கிபல வடிவுமாகி
சித்துருவாய் மேருவாய் அணுவாயெங்கும்
செழித்துப்புல் பூண்டுக ளுள்ளதாகி
சுத்தமுமாய் தூரமுமாய் சமீபமாகி
துலங்குபல நாமமொடு கடவுளாகி
பத்தர்கட்கும் சித்தருக்கும் அரியதாகி
பரவியதே பிர்ம மென பகர்ந்தார்மேலோர்.

பாட்டு.

பஞ்சவர்ணநிறமாய் ஐந்துபூத உருவாய்
பாரதில்மிகத்தானே
பலபலகடவுளாய் சிலசமயங்கள்தோறும்
பரவியே தனவானே
நெஞ்சமதிலிருந்து கொஞ்சிவிளையாடியே
நிற்பததுவுங்கானே

நேசரேயிதற்குமே முக்குணமுண்டந்த
நிலையைக்கேள் கனவானே
(உத்) வஞ்சமில்லாசாத்விக இராஜதமென்று
வழங்கும்தாமதமதை முக்குணமென்று
அஞ்சாமற்சபைநேரே—இனி அறிவிப்பேன் கேட்பீ
வஞ்சலமில்லாமலே ஒவ்வொருகுணமதின் [ரே
வன்மையை நீர்கண்டு
வழங்கும் மதனென்பதறிவாம் என்னும் நிலையை
வல்லோ ரெதிரில்விண்டு (பரு)

## விருத்தம்.

நித்திரையில் நினைவதனை கடத்துமல்லால்
நீடுலகில் மதுபானம் செய்யச்சொல்லும்
புத்திகெட்டு பிறர்பொருளைத் திருடச்செய்யும்
பெரியோரை மதியாமற் பேசவைக்கும்
சத்தியத்தை கடந்துமிக கோபங்கொள்ளும்
சரியற்ற எவ்வழிக்கும் முன்னேநிற்கும்
இத்தனையுங் கொள்ளுமொரு குணந்தானையா
எழிலான இராஜதமென் றியம்பினரே.

## பாட்டு.

புத்தியிற்சிறந்தநல் உத்தமரே தாமத
பூந்தொழிலதை யின்று
புகலுவேன்கேட்டு மாரன்மடிந்தானென்ற
புதுமையை உரையின்று
வெற்றிமிகுந்த மாடுமக்கள் மனைவியொடு
வீரமாய் வாழ்வதொன்று
வீணரேபாரும்காம ஆசையுடன் புணர்ச்சி
விளம்பும் பெண்டுதானென்று

(உத்) கத்துறீர் மன்மதனென் றொருவனுண்டென்று
காமமென்பது தாமதகுணமென்று
எத்தனை நூல்பாரே - உனக் - கெடுத்துரைக்குதே சீரே
புத்தியில்லாமல் சிலபுராணத்தைப் பார்த்து
புறட்டிப்பேசிடும் பேரே
புகன்றிடும் வேதாந்தகலைகளையெடுத் தென்முன்
புகழ்ந்தடிதொழுவீரே. (பல்)

விருத்தம்.

ஞானவெட்டி குறளுடனே சொரூபசாரம்
நல்லதிரு கைவல்யம் ஜீவோற்பத்தி
தினவுட லறிவிளக்கம் பிரபுலிங்கம்
தெவிட்டாத வாதிஷ்டம் சத்தியநூல்கள்
மோனநிலை யுற்றசில ஞானமெல்லாம்
மொழியுதுகாம மொருகுணந் தானென்று
ஞானநூல் வகையறியா உங்களுக்கு
நவின்றேனிவ் விபரமதை சபையில்மாதோ.

பாட்டு.

இந்தவிதம் மதனை சிந்தையிற்கொண்டு
ஏனோ அவையில்நின்று
எரிந்தானே மாரனென்று தெரிந்தவர்போலே
இயம்புகிறீர் கதையொன்று
சுந்திரம் புகழ்ந்திருந்த நாகை கோவிந்தசாமி
சீடன் சொல்லறிகண்டு
சும்மா அதட்டி அறியாமல் பாடாதே
சுருதிவழிகள்கண்டு
(உத்) சந்ததம் கவிமழை பொழிந்திடும் குணவான்
சர்ச்சனர்புகழ் கிஷ்ண சாமி நல்கனவான்

செந்தமிழிதைப்பாரும்—என்னை—ஜெயிக்கப்போகுமா கூறும்
பைந்தமிழ் இலக்கணம் அறிந்துநான் வந்ததேனென்ற
பாவலரானபேரே. (பரு)

விருத்தம்.

அடுத்தாலும் சற்குருவை யடுக்கவேண்டும்
ஆசானிற் திருமொழியை யறியவேண்டும்
எடுத்தாலும் நல்லபெய ரெடுக்கவேண்டும்
என்னாளும் தோல்வியில்லா திருக்கவேண்டும்
துடுக்காக சபையதனில் பேசலாகா
துஷ்டகவி களையணுவும் விளம்பலாகா
இடும்பாகஇத் தனையுமறியா தோர்முன்
எத்தனையான் படித்தாலும் விதலந்தானே

பாட்டு.

துஷ்டத்தனமாகக்கவி
இஷ்டப்படிபாடாதீர்காண் நீருமே பா-பா அந்த
துற்புத்தியதனைவிட்டு வாருமே
மட்டித்தனமாகவாயால்
எட்டிக்கத்துவதிலென்னசாரமே உங்கள்
மூடத்தன படிப்பிதுபாருமே
குட்டிக்கரணங்கள் போட்டு
பாடுங்காலென்னை ஜெயிக்கநீருமே எ-எ உடன்
குருவையும் சேர்த்தழைத்து வாருமே
(உத்) விட்டுவிடு யிதுவெல்லாம் யீனம் வீணாய்
படுவாயென்னிடம் அவமானம்
கெட்டிக்காரரென்று உம்மை
தட்டிச்சொல்லவேணுமய்யா வாருமே அந்த
துற்புத்தியதனைவிட்டு நீருமே

ஒன்றுக்கு நான் பத்தெடுத்து
ஓதவழிதெரியாத மூடனு தே-தெ
ஒரேசொல்லாலடக்கிடப் பாட்டுபாடேனு
நன்றல்லவே யிதுனக்கு
ஞாயமதை ஓதுரேன் முன்பாகனு ஓ-ஓ
நீ அப்படிப்பாடாதே மதியீனனு
(உத்) சென்று உன்குருவிடம் நின்று
செழித்தங்கள்போலே மறையுண்டு
குன்றவில்லி யெரித்ததை
இன்றெனக்கு காட்டிடவேவாருமே
அந்த துற்புத்தியதனை விட்டுநீருமே
ஊத்தைவாயாலே எழுத்தைசேர்த்
தகந்தைபாடுவதும் வீரமா பா-பா உம்மை
ஏசிப்பாடவென்ருல் வெகுநேரமா
பார்த்தவர் சிரிக்கும்படி
சூத்துவாய் தெரியாமலே கோரமா தெ-தெ தாங்
படிப்பது தானுமொருதீரமா [கள்
(உத்) ஆத்திரப்படாதே தலையாட்டி இப்போ
அழுவதுபோலே குரல்நீட்டி
காத்திரப்படாதேதிரு
வாத்திபர்பாடலில்லாவிட்டால் வாருமே
அந்த துற்புத்தியதனைவிட்டு நீருமே
சிங்கம் நாங்களென்று என்முன்
எங்கிலும்மிகவே நீங்களாடுறீர் நீ - நீ
சித்தம்எப்படியோ வந்ததெல்லாம் பாடுகிறீர்
அங்கமதுநாணமலே
எங்களிடம் பந்தயங்கள் போடுறீர் ப-ப கண்ட
யிடமெல்லாம் பாடிப்பாடி ஓடுறீர்

(உத்) சிங்கார கோவிந்தசாமி அவர்
சீடன் கேள்விக்குப் பதில்காமி
துங்கமாய் மதனெரிந்த வரலாரதை
யின்றெனக்கு ஓதாவிடில் வாருமே அந்த
துற்புத்தியதனைவிட்டு நீருமே.

## வேறு பாட்டு.

சுழிமுனையிலே நடனம் பார்த்துவா—பொதிகைமுனியே
சுழண்டவாசியே சுருக்கா யேற்றுவா—தத்தையா (சுழி)
ஈசன் தவமிருக்கவில்லை என்றும் ஜனகாதியில்லை
வாசமலரெரியவில்லை மாரனங்கே மடியவில்லை (சுழி)
அண்டர்கோன் மன்மதனை அங்கழைத்ததேதுசெயல்
பிண்டமுதலாகாய பிர்மங்காணு மகஸ்தியரே (சுழி)
ஆவியொடுகலந்து அமர்ந்திருக்கும் காமமதை
பாவிகளறியாமலே பத்தினுனென்பதென்ன (சுழி)
எழுவகைதோற்றமது ஈரிரண்டுயோனியிலே
பழுதற்றுதிக்கும்மந்த பராபரமின்னதென்று (சுழி)
ஆசையதுவுமாடும் அன்னஉடை நீங்கவே
ஓசையிடும் நாவலரே உண்மையது தோன்றிடவே (சுழி)
பெண்ணாசை பொன்னாசை பேசும் உடலாசை
மண்ணாசை நீங்காதென்று மதியிற்றெளிவுறவே (சுழி)
பஞ்சேந்திரியமதின் பதுமை நீயானபோதும்
நெஞ்சிற்கலக்கம்விடா நேர்மையிது பாவலரே (சுழி)
இன்பசல்லாபதீரன் இராஜகோபாலு தாஸன்
அன்பர்க்களித்தஉரை ஆண்சிங்கவாக்குவழி (சுழி)

## விருத்தம்.

விக்கலென்றும் தொக்கலென்றும் விடிந்தபின்பு
வீங்கலென்றும் தூங்கலென்றும் நான்குங்கூடி

சக்கரையென் றெழுதி யேட்டில்
ஷாகிரு நக்கிடவும் சாரமாமோ
வெக்கமிலா எரிந்தகக்ஷிப் பாடிப்பாடி
வேசியர்போல் மாரடித்து அழுகின்றீர்கள்
அக்கரையாய் காக்கையது குளத்தில்மூழ்க
அன்பரே கொக்காகா தறிகுவீரே.

## பாட்டு.

சர்க்கரை என்றெழுதி நக்கிப்பார்த்த புலவீரே நூல்
சங்கதிதெரியாமல் இங்குவந்துளருகின்றீரே
அக்கரையாய் நல்லநாளொடு திதிவாரம் பாரே இது
ஆகமமதிலில்லா கதையல்லகாண் கவியோரே
முக்கியமாயோனியொடு பொருத்தம் பார்ப்பதுவும்சீரே மிக
மகிழ்வாழ்செய்திருப்பது புராணவழிகளுண்டா கூறே
(உத்) முக்கியமா யகஸ்தியர்பாரு
முன்னால் உரைத்தார் சோதிடம் பலவாறு
அக்ரமமாக யிதைபிறட்டிய நேகம் செய்தாரே (நூல்)

உலகத்தோர்பிழைத்திட நூல்களைசெய்தவர்கள் பேரு-நான்
ஒவ்வொன்று யுரைக்குறேன் கண்டு உன்மனத்துயர் தீரு
நலமாகக்கும்பமுனிபோகர் இடைக்காட்டாரைப்பாரு—நல்ல
வள்ளுவரொடுரோமர்கபிலர் புஜண்டர் பலவாறு
(உத்) கலங்காமல் கொங்கணவர்தானே இன்னம்
கபிலர்புஜண்டர் பலவானே
நிலமீது அவர்செய்த மறையைக்கேட்பீர் புலவீரே. (நூல்)

நல்லநாள் யோகம்திதி நாழிகைலக்கனமும் தானே—இவர்
நாடிசெய்ததல்லால் வியாசன் தனக்கு சத்தியில்லையாகோனே
அல்லது உமக்கின்றுவயிருவலித்தால் கனவானே— அந்த
ஆகமமதிலதற் கவிழ்தங்களுண்டோ சீமானே

(உத்) எல்லாமறிந்தே நானென்று கவி
என்முன் பாடவந்திரோ இன்று
சல்லாபமாக உங்கள் குருவையழைத்து வருவீரே. (நூல்)
ஆகமபுராணத்தை பொய்யெனச்சொன்னவர் பேரு திரு
அகஸ்தியர் வள்ளுவர் கபிலர்முனிவரமர் கோரு
தாகமுடனவருக்கேது சாபமிருந்தால் கூறு இனி
தானென்ற ஆணுவத்தால் வசனம்சொல்லாதே நேரு
(உத்) காகம்போலலராதீர் நீரே கவி
கோவிந்தசாமி சிஷன்நேரே
ஜாக்கிரதையாய் புராணம்தள்ளிப்பாடும் புலவீரே. (நூல்)

விருத்தம்.

சத்தியவள் முன்பிறந்தா ளென்றூர் புராணம்
சதாசிவன் முன்பிறந்தா னென்றூர் புராணம்
பத்திமுன்னே லக்ஷிமியுமென் றூர்புராணம்
பராபரமே முதலாவதென்றூர் புராணம்
அத்திமுகன் முதல் என்றூர்புராணம்
அல்லதிருமால்முதல் என்றூர் புராணம்
இத்தனையில் எதையொப்புகொண்டு
ஏற்பதையா உங்கள்கக்ஷி இச்சபையின் நேரே.

பாட்டு.

அண்டமெல்லாம் ரெண்டுகையால்
குண்டுபோலவே திரட்டி
அள்ளிவிட்டெழுந்து பாடும்தீரரே இன்று
துள்ளிடாமலே பதில்சொல்வீரரே அந்த
அரன்மதனையிடும் திறமை கண்டறியா
பரமனெரித்தானென் றுரமதாகச் சொன்னீர்
அந்த நேரம் கண்டுரையா சூரரே மதன்
வெங்கதெங்கே பாழும் குலக்காரரே

மண்டலமா விண்டலமா உண்டுறங்குகின்ற ஒரு
மானிட திரேகத்துள்ளே நூலெடு யாரும்
காணிட வளமிருந்தாலே தடு அண்ணே
வடிவுடைய சிவன் முடியின் சடைமீதில்
துடியமர்ந்த கெங்கை குடி யிருந்ததங்கே
மால் மகனுக்கது தெரியுமா கொடு கந்த
வேள்உயிரை எமன் கொண்டானு தடு
(உத்) கண்டுபாரும் கல்லாலின்கீழே இருந்த ஜன
காதியெங்கே சொல்சபை மேலே
பண்டுதாவிடப்பாகமதிலே சிவணணிந்த
பார்வதியா ளெங்கே யக்காலே
அண்டமதில் வண்டுராகம்
விண்டு விசித்திரமாய்கவி (அள்)

கலக்கமுற்று வழக்காடாதே
கிழக்கு மேற்கு வடக்கு தெற்கில்
காமன்மேல் எப்பாரிசம் தீப்பட்டது பின்னே
லோமன்னு திரும்பாதே வாய்விட்டோது வெகு
வெகு கவனமாயிருந்த தவநிலே கலைந்து
சிவனுதல் விழியால் அவனெரித்தானென்ற
காரணமதிசயமாய் விட்டது நி
வாரணஞ் செய் பாட்டிலுரை காட்டாது
துலக்கிப் பாரும் விலக்கொண்ணு துஷாருஞான
பூசனி யுரைத்த மொழி பார் எந்தன்
நேசன் நீரானதால் சொன்னேன் தேர் உன்னை
புதுக்கோட்டைக்கு வழியது கேட்டாலே
மதுக்கடைக்காரன் எதுக்கே வெனச்
சொல்லிப்போகாதே மதம்
அல்லாதுடலிலது வேகாதே

(உத்) பெலக்குறையானலும் பாட்டதில்-ஜமாக்கள்
மலைப்பிஞ்சை பார்த்தெடுத்து ரோட்டத்தில்
கலக்கப் பெய்யாதே காணுட்டத்தில்—கக்ஷியதை
கலைத்துவிட்டு ஓடிவிட்டதில்
அலக்கு செய்யாதுன் கருத்தில்
கிலைக்கண்ணடி போல் தமிழை (அள்)

உன்னைப்போலே கண்ணிமந்தோ
ரின்னிலத்தில் யாருமில்லை
யுக்தியா யறிந்திடாம லேசாதே இன்று
சத்தியமாப் பிரண்டு பேசாதே உன்னை
ஊதி பறக்கவிட் டெகிரச் செய்யும்
வாதியானென்ற சேதி யறியாயா
ஒடுக்குவாலை இன்று கையை வீசாதே பதிலை
முடுக்கிவிட சற்றும் மனம் கூசாதே
என் சன்னதானம் தன்னிற்பாடி
குண்ணி எழுந்தே பயந்து
தப்பித்தோடி போனேர்களைக் காணீரே—யாரும்
செப்பிடாதினலே மோசம் போனீரே நல்ல
சாக்ஷிலோகமது ஊக்ஷிதர்கள்
மூச்சிவிட்டு அலறலாச்சுதா
சமயமய்யா வெந்தகக்ஷி தானீரே விடை
அமையக்காட்டி யிம்மெட்டாய் பாடலானீரே
(உத்) பன்னிரண்டு நாளதானலும் விடேனே உன்
பார்க்காதே இச்சபை கீழ் மேலும் [னை
தன்னில்லமையாகவே வாழும் முத்தேவருக்கு
சம்சாரமேதுக்கு யெக்காலும்
அன்னிதத்தாற் பின்னிகன
மின்னலொளி போற்கவிதை (அள்)

நாவினுலே தாவி தாவி கூவினோரே எங்களொடு
சற்குருவை தான்பணிய வேணுமே உரை
சிக்கறுத்துக் கொண்டுபாடக் காணுமே தஞ்சை
நகருக் கருகென பகரும் கரந்தையில்
முகரு பெற்றுத்தனி நிகரில்லாமல் வாழ்
இராமசாமி பாட்டிதுவும் தானுமே நல்ல
பூமகள் திருமுகம்போல் தோனுமே
சேவியவரைப் பூவுலகில்
கோவிலென்ற நாமங்கொள்ளா
திருச்சிறுபதியெனும் நாடனே தோடா
பரிசுபெற்ற சாமிநாதன் சிடனே ஷகரில்
எதிரிலாக்கவி பதியினிற்பொழி
மதியிலொய்யார அதிவீரனருள்
பட்டா ராமனெங்கள் குருமோனனே அறி
சித்தஜனெரிந்தோர்க்குக் கார்க்கோடனே
(உத்) பாவினம் தெளிந்த வாக்கய்யா சமரஸமாய்
பாடத்தேனொழுகும் ஜோக்கய்யா
சாவியென்றுணரவேணும் துய்யா சிங்காரவேல்
சாறறும் நன்மொழியிதனை மெய்யா
ஆவிபோக கூவிவரும் பாவிகளேன் வீண்மொழியை (அள்)

விருத்தம்.

ஆலால முண்டசிவன் யோகமதி லேயிருக்க
அணங்கனும்போ யத்தவசை அழித்தானென்றீர்
காலமென்ன நேரமென்ன யுகமுமென்ன
கல்லாலின்கீழிருந்த ஜனகாதி நால்வரெங்கே
சீலமுடன் மதன்யோகம் அழித்தபின்பு
சிவன்தபசு மறுபடியும் செய்தாரோதான்

ஞாலமதில்நூல் வழியாய் உரைப்பீரானல்
நாவலரென் றுமைமதிக்க நியாயம்தானே.

வேறு பாட்டு.

தத்துவக் கடலைவாரி—மெத்தவும் குடித்தமிழ்ந்த
தாணிபுகழும் ஞானசங்கமே
தக்க கேள்விகேட்குறேன் வித்வசிங்கமே
·தாங்கள் விடையின்றளிக்காவிடில் பங்கமே இந்த
மண்டலந்தனில்—கண்டுகாமன்
பண்டிகையென கொண்டுவந்தோரே
புகலும்மதன் கன்னிபேருமே
பிறந்தவுடன்ஜாதகம் வரைந்ததாருமே
சத்தியமாய் வருட மாதம் தேதி நாழி யோகம் திதி
சாற்றியெனை ஜெயித்தால்வீரமே
ஷாகீர்கழுத்தில்போடுவேன் தங்கஹாரமே
சற்றுகலகம்செய்திடில் வரும்கோரமே
திருட்டுக்கவியை உருட்டிப்பாடி
மிரட்டவந்த புரட்டரேகேள்
ஆயுதப்பயிற்சி செய்ததாருமே அதை
அறிவிக்கவேணுமினி நீருமே
வித்தையிற்றெளிந்தவரே சித்தஜனெரிந்ததிரு
விளம்பும் வருடம் மாதம் தேதியே
விருதாபாட்டைப் பாடுவதென்னநீதியே
எடுத்துக்காட்டிடில்போது மெந்தன் வாதியே
இறுக்கிமீசையை முறுக்கினலும்
பெருக்கக்கூறும் சுருதியுண்டா
எதுக்கிந்தசபையில் வாதய்யா
எல்லாம்தெரிந்தோரிடமாகிலும் கேளய்யா

இத்தரையில் வெற்றிபெற்ற உத்தம புலவரென்று
மெத்தவும் குடித்தமிழ்ந்த சங்கமே (தக்)

ஆதியிலவர்க்குவித்தை ஒதிவைத்தவேதியரார்
ஆற்றியேபதிலெனக்குக்கூறுவீர்
ஆன்லர்இருந்தால்கலை யெதோகொண்டாடுவீர்
அல்லாவிட்டாலொழுங்கல்ல நீர்பேருவீர்
ஆதிமறையெனும் வேதவழியினை
ஒதியுணரா பாதகக்கவி
பாரில்பலரறியப்பாடியே
பார்த்துபதுங்காதீர் எனைக்கண்டாலோடியே
ரீதியாய்மதனுக்கெந்த வருடமதில்கலியாணம்
நடந்தது அந்ததேதிநாழியில்
நல்லகணபதிவேலவ ரங்குண்டா
நாரிபாகனெரித்தநூலில் கண்டுசொல்
பூவுலகிற்றுவியென்முன் மேவிகவிகூவிவந்த
புலவோரேசிவன் சைவமாச்சுதே
பெண்ணைவிஷ்ணு மகனுக்கியவாச்சுதே
மேதினிலிந்தப்படி சொல்லிவைத்தநூலெதுமுன்
வாதியென்றோடியே வந்த சங்கமே (தக்)

அங்கஜனுக்கன்றுவில் சுரும்புநாண் அரும்பளித்ததாரு
அவையில்சொல்லி நீயும் வந்தையா
கலியாணமானதற்கு முந்தியா
கூடல்முரசுவந்ததென பிந்தியா
வஞ்சியர்படை பஞ்சபாணன்
கொஞ்சிமொழியுடன் மிஞ்சிசெல்கையில்
வழியில்எத்தனை பெண்கள்பாரய்யா
வந்துபின்படையானவர் பேர்கூறய்யா

பங்கப்பட்டவனெரியும் போதுவயதென்னவர்க்கு
பலபேர்நிறைசபையில் சொல்லிவா
பாரில்கொட்டை முட்டையைநடவல்லவா
பகரும்சாஸ்திரமிருந்தா லோதிவெல்லவா
பக்ஷமுடன் இச்சபையில்
கக்ஷிசெய்யும் பாவலோரே
இதற்கென்ன சொல்வீரே
பாட்டைகேட்டபின் டேப்பைகீழேவைப்பீரு
மங்கையர்புகழும்கவி எங்களிடம்பாடவேண்டாம்
மனதில் கவனம்வையும்சங்கமே (தக்)

கல்லாலின்கீ ழரன்தவம் வல்லவா செய்தானென்றீர்
கடவுளவர்க்குமேலே தேடுவீர்
கண்டுபதிலொன்றுசொல்லி அப்பால் பாடுவீர்
கலைவழியில்லாவிடி லெழுந்தோடுவீர்
கனமதாகவேஜன காதியர் துணையிருக்க
நெற்றிவிழிதிறக்கும் போதினில்
நின்றஜனகாதியர் எங்கேயொளித்தார்மேருவில்
கொல்லத்தெருவினில் ஊசிவிற்பதைப்போல என்முன்
செல்லாதுன் கக்ஷிவீணாய் போச்சுதே
குணவான்சிங்காரவேல் கவியிதாசுதே
கூறிபெரியோர்மகிழக் காலம்வாச்சுதே
குவலயத்தில் அவலமாக
சவலமற்ற கவியைப்பாடி
முட்டிக்கொண்டாலுந்தான்
கீர்த்திவானென்ற பேருனக்குவதுங்காண்
இல்லறத்தில்வல்லமோகலைமயலி விருந்துகாம
தொல்லையிலழுந்தும் ஞானசங்கமே. (தக்)

# மன்மத தகன சல்லாப இலாவணி.

## துதி விருத்தம்.

சோதியிலே அஷ்டவித மூர்த்தமாக
　　சூக்ஷமதில் உலகமதைத் தான்படைத்து
ஆதியிலே சிருஷ்டிதிதி சங்காரத்தை
　　அரனயன் மால்மூவருக் களித்துதேவ
நீதியிலே துஷ்டருக்கு சிஷ்டையாக
　　நினைவருளும் பிரணவ சொரூபமாகி
பூதியிலே அமர்ந்த நிருமுதலெழுத்தை
　　போற்றுவேன் மதன்சரிதை சாற்றுவேனே.

2

கருவாக யெனையளித்து கெற்பமீது
　　கருணையுடன் தசமதியும் சுமந்து பின்பு
உருவாக யீன்றெடுத்து அமுதமூட்டி
　　உடலுயிராய் கார்த்தவனை தந்தையோடு
திருவாக முத்தமிழைத் தெரியஓதி
　　தித்திக்க ஸ்மிருதியுக்தி அநுபவத்தை
பெருவாக உகந்தளித்த குரவர்பாதம்
　　போற்றிகவி மழையையினித் தூற்றுவேனே.

3

சொல்லழகும் தமிழ்வனப்பும் பொருந்தஞான
　　சூக்ஷமதை ஆராய்ந்து யாப்பிணைத்து
வல்லதொரு காவியநூல் வளமையாக
　　வழூத்திவரு மியற்றமிழின் வாணனெங்கள்
செல்வதுரை இராஜகோபால் செய்த பாட்டு
　　செவிகுளிரும் பசியடங்கும் மதியுமோங்கும்
நல்லபுகழ் மணம்வீசும் உருசிகரத்தில்
　　காவினிக்கும் தேன்சுவைக்கும் நவின்றூலாமாதோ.

## விருத்தம்.

தத்துவ வேதாந்த யோகஞான
 தவசியென அத்வைத வாசியேறி
சுத்தியே ஆறுதெரு மீதிலோடி
 சோதியொளி சுடர்முனை யதனைநாடி
அத்தன் மாலானைமுக னம்பிகை
 அயனாறு முகனிவர் தம்மைக்கண்டு
வித்தகரே சாயுச்ச மடைந்தவரோ
 விளம்புகின்ற கொள்கையிது விகடமாமே.

## பாட்டு.

ஆதாரமாயோர் கடவுளை முதலில்
 அவையதிற் றுதிசெய்யத் தெரியாமல் (அ)
ஆதியனாதி சோதிமயனென
 அறைகுறீர் யாதெனக்குறியாமல்
நீதாகுணமுட னுமக்கிதை ஓதிய
 நிபுணரைக்கேட்டும் அறியாமல் (நி)
நிறைந்தவஸ்துவென மறைபடக்கூறுநீர்
 நிச்சயம் யீதெனப்புரியாமல்
(உத்) சாதாரணமாய்க் கடவுளாறென்று
 சாற்றும் பதவுரை யீதெனப்புகன்று
வாதாட வழியினைத் தெரியாமல் (ஆதி)

2

எந்த மதத்தைப்பற்றி நீர்வந்து
 என்னெதிர் கக்ஷிபதுகொண்டு (எ)
எடுத்துப்பேசுறீர் ஆச்சிரமதுவும்
 எதன்கண் நிற்குறீ ரதைவிண்டு
தந்திடும் பதவியென்பது மென்ன
 தங்களுக்குரியதை முதல்கண்டு (த)

தருகுவீர்விடைகள் தொழில்வயதுடனே
தமிழ்நூலளவாய் நீரின்று
(உத்) விந்தையாயுன் ஆசான் தனக்கு
விபரமாயோதி கொண்டுவா கணக்கு
தந்தேன்கற்றிதைத் தெரியாமல் (ஆதி)

3

மரமதினிலேகள் பூபிஞ்சு காய்பழம்
மலிவாய்செழித்து அமைந்திருக்க (ம)
மயங்குவதேனே பலதையும்நீக்கி
மதியில்லா மரம்தனைபுசிக்க
பரசிவன் மாயலன் இஸ்லாம் கிருஸ்து
பாருங்காணிதுபோல் தான்பெருக்க (பா)
பாவலாபிரணவ மதையினிதுண்ண
பகர்ந்துளார் முன்னோர் மனங்களிக்க
(உத்) அரன்மகனென ஓர்முறையதுமாக
அவதாரம்பூண்டு இறையவராக
கரமதில்வந்ததும் தெரியாமல் (ஆதி)

4

காளமேகம்போல் கவிமழை பொழியும்
கல்விமானெனும் ஜெகவீரன் (க)
காசினியதனில் தேசிகர்புகழ்திரு
காரிகையிலக்கண வதிசூரன்
நாளது மம்பிகையிணையடி மறவா
நற்குணவானெனும் நிதிமாரன்
நம்மிட சங்கைகளனைத்தையு மோட்டும்
நாயகனியற்றமிழ் மதிதீரன்

(உத்) பாளவாய்க் கமுகின் மதுரஸ வாக்கு
பாடினேன் இராஜகோபால் மொழிகேக்கு
ஆளனின் மகத்துவம் தெரியாமல் (ஆறி)

விருத்தம்.

மதனெரிய வில்லையெனப் பாடவந்த
மாபுலவா சபையிலொரு சிறியகேள்வி
பதமறிந்து உரையதனைச் சொல்வீரானல்
பாவலரென் றென்விருதை கொடுத்துப்பின்பு
இதமுடன் உங்கள்கூடி ஜெயித்ததாக
இன்பமுற தமிழ்மாலை யதனைச்சூட்டி
சதமினியே புகழ்ந்திடலா மில்லாவிட்டால்
ஷாகிருநீர் தோல்வியென சாற்றலாமே.

பாட்டு.

இயற்றமிழ் இராஜகோபால் பாட்டு—இதை
இச்சபையி லுச்சிதமாய் கேட்டு
இத்தரையில் வித்தகரே சுத்தமதாய்
சொல்லி விடைநாட்டு—நூல்காட்டு
மாரனுக்கு எத்தனைபேர் தானே—இந்த
மாநிலத்திலுண்டு சொல் சீமானே
மங்களமாய் சங்கையற இங்குள்ளவர்
தாமறிய ஊணே—பதில் காணே
ஒவ்வொரு பெயரிற் குரையாது—அதன்
உண்மையதனை முதலிலோது
உத்தமரே கத்துவதேன் மித்தைமொழியாகும்
இதுசாது—விடுவாது
வல்லவரின் உன்னிதத் தமிழ் வாக்கு—ருசி
வளமையதிற்றேனமிர்த கேக்கு

வையகத்தோர் அய்யமற செய்யுமிது
நாவலரே ஜோக்கு—வாதை நீக்கு

வேறு மெட்டு.

வித்தகரென்று வந்தீரே விம்புக்கவிபாட—சன்யாஸ
சித்தர் தாமென்று வந்தீரே சிந்துக் கவிபாட
அத்தனெரித்தது மால்மக னன்றெனில் ஆரென நூல்காட்டு
விடைபோட்டு - புகழ்கேட்டு - உளரி (வி)
உபநூலென்பதின் உரைகளுணர உனக்கேதுத் திறமே
ஒதிமரமே - பதிபரமே—அரிய (வி)
சமய மதநூல் சைவமதனை ஷாகிரு நீதேடி
உடனோடி - ஜதை கூடி—ஒளிய (வி)
தர்க்கஅநுப வயுக்தியும் தானுடன் தன்மையறி வீரா
விடை நேரா - தரசிரா—எனினி (வி)
எரியாமன்மதன் எவரின் சுதனென்றெடுத்துரையினியே
நூல்தனியே–இசமுனியே–ஓடாதே (வி)
மங்களமாகவே உங்களுக்காதாரமாகிலும் நூலுண்டா
இதுதண்டா - எடுதுண்டா - மாறியே (வி)
இத்தலம்புகழ்ந்து சித்தங்களிப்புற இராஜகோபால் வாக்கு
ருசிகேக்கு - தரும்ஜோக்கு - பலேபா. (வி)

விருத்தம்.

சித்தஜனர் பத்தினது மித்தையென்று
சிறந்தகவி பாடவந்த புலமையோரே
அத்தனையும் பொய்யென்ப தல்லால்வேறு
ஆதாரம் ஒன்றேனும் காணவில்லை
கத்துகிறீர் தட்டுகிறீர் கோஷ்டமாக
காரணமும் காரியமும் விளங்கிடாத
தத்துவத்தை வாரிபுங்கள் தலையிற்கட்டி
தானமுரும் வேதாந்த தன்மையாமே.

பாட்டு.

வெற்றிவீரப் பட்டமுடன் சித்திரக் கவிபடித்த
வித்வகவி ஞரேயிங்கு வாரும்வாரும்
வேளெரிய வில்லையென்று உங்களுக்குச் சொன்னுலே
வெட்டவெளி யாய்ச்சபையில் தாரும் தாரும்
கற்றவரே உற்றவழி சற்றும் பிரண்டுப் பேசாது
கக்ஷியதைத் தான்முடிப்பீர் நீரும் நீரும்
காட்டுவீரா வேதம்நாலு சாஸ்திரங்க ளாறிலேனும்
கண்டிருபத் தெட்டாகமச் சீரும் சீரும்
(உத்) மற்றப்புராணங்கள் பதினெட்டிலேனும்
மாறும் உபபுராண மதிலிருந்தாலும்
குற்றமில்லைபாவலரே வாரும்வாரும் (வேளெ)

சித்தர்சொன்ன வாக்கியமும் ஒத்துக்கொள்ள சம்மதம்
செப்பும்இதி காஸமதிற் கண்டு கண்டு [காண்
சீர்பெருகும் நன்னகரில் பேர்பெரு மிலக்கியங்கள்
சிறந்திடு மிலக்கண நூல் கொண்டு கொண்டு
தத்துவ வேதாந்தமுடன் அத்துவித மாகிலுமே
தானிருந்தால் போதுமிது விண்டு விண்டு
தாரணி யதனிற்பரி பாஷைகள் பதினெட்டதில்
தங்களுக் குறுதியெது உண்டு உண்டு
(உத்) இத்துணை யில்லையெனில்கத்துவ தென்னலாபம்
இச்சபையோ ரெதிரில் லச்சைப் படவோசாபம்
சுத்திமுத்திப் பாராமலே வாரும் வாரும் (வேளெ)

முன்னுல்கேட்ட கேள்விக்கெல்லாம் நன்னயமாய் நானுரைக்
மூர்க்கத்தன மாகயின்னம் வாது வாது [க
முற்றுமறிந் தவர்போலப் பற்றில்லாத ஞானியென
மொழிகுறீர் போதும்போதும் சாது சாது

கன்னல் வில்லோன் அத்தன் கண்ணல் பின்னமானனென்று
காட்டிவந்த சாஸ்திரங்கள் தோது தோது [பேசி
கலங்கியே உங்கள்மனம் துலங்கிடா மலேபோச்சோ
கண்டபடி பேசுவதும் தீது தீது
(உத்) அன்னீத மானஇந்த கக்ஷியை விடுத்து
அவனிதனி லேயெங்கள் ஆசானையடுத்து
சொன்னவிதம் தானுணர்ந்து வாரும் வாரும். (வேளெ)

மாங்கனி குலையிழைந்து பாங்குடன் ரஸம்பொழியும்
மன்னர்பதி சென்னைநகர் வாசன் வாசன்
மாமதுரத் தேனொழுகும் பூமணக்கும் காவனம்சூழ்
மங்கள மிலங்கும்ப்ர காசன் காசன்
தேங்கனி உடைந் திளநீர் ஓங்கியே பெருகும்மடை
தேசத்தி லனைவருக்கும் நேசன் நேசன்
தெள்ளமிர்தச் சினியென அள்ளியள்ளித் தமிழதை
திடமா யெனக்களித்த தாஸன் தாஸன்
(உத்) பாங்குடனியற்றமிழ் பாரினிலோதி
பாவலன் இராஜகோபால் கூறினநீதி
ஏங்கா னின் னமும் சங்கை வாரும் வாரும் (வேளெ)

விருத்தம்.

வேதமதைப் பிரித்துபல காண்டமாக
வியாஸருமே கடவுளரை வேறதாக்கி
பேதகமாய் செய்தததுபொய்யேயானல்
பேசிடும்நம் ஜாதியெலா மொன்றதாமோ
சாதகமாம் கலைஞானத் திறமையாலே
சாதிக்கும் வல்லபமேன் பானுகோபன்
ஆதவனைப் பற்றிவந்து பிணைத்ததுவு
மவனடைந்த வரமெனவே அறிகுவீரே.

பாட்டு.

கேட்டகேள்விக் கான்ஸரிதோ பாட்டுடன் தருகுறேன்()
நீட்டி நூலைக்காட்டி சபையில் சூட்டிஜெயம் பெறுகிறேன்
வருணம் நாலும்பாருமே மறை வகுத்தது மச்சீருமே
தருண ம்தனில்அனு லோமர்கள் தானுதிக்கக் கோருமே(கே)
பிரதிலோமர்யேகமே தான் பேசும் நூல்கள்வேகமே
மறதிவேண்டா மந்தாாளர் மனதிற்கொண்ட யூகமே (கே)
காராளர்கள்நீதியே பின் காணும் சங்கரஜாதியே
தாராளமாய்ப் பூவுலகில் தமிழதனை ஒதியே (கே)
கோரிடயிதிகாஸமே பார் கூடினதும் வாசமே
சீறிவந்த ஜாதிபேத சிறப்பிது உல்லாசமே (கே)
அகத்திற்குள்ளேகூடியே நீர் ஆருதாரம் நாடியே
ஜெகத்திலோதும்போது சூரன் சூரியனைத்தேடியே (கே)
கட்டினதும் மாயமோ உன் கக்ஷியும் உபாயமோ
எட்டிப்பார்த்து சித்தாானோர் எழுதினது நியாயமோ (கே)
ஒப்பாவிடிற்றள்ளுமே வீண் ஒழுக்கமென்று விள்ளுமே
தப்பாகாது புராணசாரம் தானறிந்துக்கொள்ளுமே (கே)
இராஜகோபால்வாக்கியம் சீர் இயற்றமிழ் சிலாக்கியம்
புராதனநூல் வல்லவர்க்கு புகலவந்த போக்கியம் (கே)

வேறு மெட்டு.

ஈராறு சமயத்தை நாடுமே— நான்
இருப்பது (சைவமா) வைஷ்ணவம் கூடுமே
சீராறும் ஆச்ரமம் தேடுமே— அதை
செப்பிடநான்கெனப் பாடுமே
பாராகும் கிரஹஸ்த வீடுமே— நாலு
பதவியதிலினி நீடுமே
கோராறு பதினுவில் சூடுமே— எந்தன்
நிலையது சாரூபத்தோடுமே

## விருத்தம்.

சிவமதுவும் மவுனத்தி லிருந்தபோது
    ஜீவர்கட்கு அசைவேது என்றேகேட்ட
தவமுனியே எந்தறால் தன்னிலிந்த
    தமிழதனை உண்டுவந் தேப்பமிட்டீர்
கவனம்வை நாம்செய்த பொருளதாகும்
    கடிகாரம் ஓடுகின்ற நிலமைபோலே
புவனமதில் ஜீவவகை நடக்குமந்த
    புதுமையினை சாவியெனப் புகலலாமே.

## பாட்டு.

காரமுடன் தாமதத்தை வீரமெனப்பாடினவர் யாருமே
    நல்ல கக்ஷியிதுவும் தானுட்காருமே
பாரதனில் முக்குணங்கள் யாரவர்க்கு இல்லையதைக் கூறுமே
    நீரும் பாடும் குணம்தானதனைப்பாருமே
சாரமற்ற ஓர்குணத்தை சேரவிட்டிரு குணத்தின் சீருமே
    போகும் சங்கதியதற்கு விடைதாருமே
(உத்) சீரற்ற தாகு துங்கள் வாக்கு மத
    சித்தஜன் செயலெனவே நோக்கு
ஆரணமுணர்ந்தவர் போல் (வீர)

ஆவியதைப்பற்றி நிற்கும் தாவியந்தகாமமெனப் பேசியே
    இங்கே யாரைமிறட்டுரீர் கைவீசியே
பூவில்மனம் உள்ளடங்கி மேவிவந்தகாரணத்தை யோசியே
    அதை பூர்க்கச்செய்யும் நாதனுண்டு நேசியே
(உத்) கூவியழுதாலென்ன கீர்த்தி பார்
    கூறும் மன்மத ஒளி பூர்த்தி
காவினாலே பாவினமாய் (வீர)

ஆனைவேறுப்பாகன்வேறு தானையா அங்குசமதாற் றீட்டியே
அதை அடக்கி வருபவன்பா ரா் ஒட்டியே
ஏனையாமா மதம்வேறு காணையாமன் மதன்வேறு காட்டியே
இனி ஏற்றுவேன் சரபக்கொடி சூட்டியே
(உத்) பூனைபோல் உங்கள் கக்ஷி ஒடுங்கி
பூந்தோடப் பார்க்குதே நடுங்கி வழி
மோனையற்ற சோனைக்கவி (வீர)

முத்தமிழ்க் கடல் மடையை நித்தமும் திறந்தளிக்கும் தாஸ
தங்க முகர் பெற்ற இயற்றமிழுல்லாசனே [னே
சித்தமது தான்மகிழும் உத்தமா் தமக்கு விசுவாஸனே
வித்வ ஜெயம் புகழ் இராஜகோபால் நேசனே
(உத்) அத்தன் கண்ணால் மதனைதகிக்க நூல்
அனைவர் மனமதுவும்களிக்க
வித்தகரே நான் டுகாக்க (வீர)

விருத்தம்.

கற்றதுநீர் உயிர்மெய் ஆய்தமுங்கூட
காசினியில் இருநூற்றிப் பதினாறல்லால்
மற்றநெந்த பாஷையதில் பாடவந்தீர்
மாபுலவா தமிழ்நூல்கள் சங்கையானால்
உற்றதுந்தன் சாஸ்திரந்தா னுறுதியென்று
உரைத்திடினு மதன்வழியே கக்ஷிசெய்து
குற்றமின்றி மதனெரிந்த மார்க்கம்தன்னை
கூறுவேன் ஜெயமதனைக் கோருவேனே

பாட்டு.

அருமறை சாஸ்திர ஆகமமென்றெதிர்
அறைந்திட வந்த புலவீரே
அரிச்சுவடி யதில் அடங்கிய பேதகம்

அறிந்துமே தெளிந்திரா புகல்வீரே
திருமக ளருள்பெற தேசத்தி லனைவரும்
தேடிப் படிப்பதெது சொல்வீரே
திறமுடனே உங்கள் பாட்டன் பூட்டன்களும்
தேர்ந்து வழங்கின நூல் புல்வீரே
மருமலர்க் கவியது இயலிசை நாடக
மல்லாம லேதுகாண் பெரியோரே
மார்க்கமறியாதுன் மார்க்கத்தால் பழிக்குறீர்
மதியது பிசகியே கவியோரே
குருமுனி திவாகரம் நிகண்டக ராதியும்
கூறுவ தென்னவென் றுரைப்பீரே
குற்ற மாகுமா காம தகன னென்ற
குன்ற வில்லிபேர் மறுப்பீரே
உருவிலியென்றே மன்மதன் தன்னை
உகந்திடப் பகர்வதேன் புலவீரே. (அரி)

சித்தஜன் பிறந்தது மூன்று விதமென
சத்திய மாகநீர் நூல்கண்டு
சிறந்த சபைதனில் வருந்த வந்தீரே
சிரிப்பாகுதது யெனக் கின்று
வித்தகா உபதேச காண்ட மதனில்
வேதியன் வரமது தான்கொண்டு
விளங்கியே மாலவர் சித்தத்தி லுதித்த
விபர முணராம லேன்மூண்டு
கத்துறீர் விஷ்ணு புராண மதனின்
கருத்திது வாமென நான்விண்டு
களருதே துவாபர யுகமது மாற
கண்ண னுக் கவதாரமது ஒன்று

புத்தி யில்லாமலே ருக்மணி வயிற்றில்
பிறந்தது பிசகென நீரின்று
புகலும் மொழிக்குரை பொய்யாகா மூன்றும்
பாக வதனால் மிகநன்று
அத்தன் எரித்ததாய்ப் பேசிடும் செய்யுள்
அறைகுவேன் பாரினி புலவீரே. (அரி)

விருத்தம்.

தெண்டிறைத் துயின்றநம்பி செம்பொன்னா மார்புதோய்
வண்டாற்று கோதையவ் வயிற்றுவந் துதித்தனன்
துண்டவெண் பிறைக்கொழுந்து சூடும்நக்க னெண்ணு
கண்டிறந்த காலையிற் கரிந்திறந்த காமனே. [தற்

ஆறு விடங்களிலே மாரன் யெரிந்ததென்று
அதிசயம் பேசவந்தாய் மனம்தேரு
அங்க தேசம் இமய கிரிக் கைலை
அணங்க நாட்டெல்லை யதுபாரு
கூறும் மேருகிரி கொருக்கை நகரமது
கூடியிருக்குமிது தான்சீரு
குவலய மதிலதை இந்தியா வென்பதும்
கொள்ளலாம் ஜில்லா வெனப்பேரு
தாறு மாறுகத் தவிக்குறீ ரதுவே
தானையா பட்டணம் யெனநேரு
தாங்கள் மொழிந்திட மற்றோர் நகரெனத்
தருகுவார் கண்டதோர் யிடம்கோரு
வேறு படுத்தியும் பேட்டை புரமென
வீதியைச் சுட்டா தவர்யாரு
வேணதுண் டையா ஒருபொருள் பலசொல்
வேடிக்கை யினியுன் மனேசேரு

மாறு படுவதும் மண்பொன் உருவதில்
மாநிலம் தனில்காண் புலவீரே. (அரி)

## விருத்தம்.

ஓரிடத்தை வீடென்றும் வீதியென்றும்
ஓதலாம் நாடென்றும் நகரமென்றும்
பாரிதையே பட்டணமும் பேட்டையென்றும்
பகரலாம் புரமென்றும் தேசமென்றும்
கோரிடலாம் மண்ணதனை சட்டியென்றும்
கூடமென்றும் சாலென்றும் குடுவையென்றும்
சீரிலகும் கடுக்கனென்றும் காப்பாமென்றும்
சிறப்புபெயர் கொண்டதுவும் பொன்னுமையா.

பங்கமில்லாமல் தாங்கள் கொண்ட சங்கைக்கு பதில்
பத்தரைமாற்றுத் தங்கம்போல் பாட்டு
பல்லோர் நிறைசபையில் சொல்லிவங்தேனினியே
பதுங்கி ஓடாதே பதில் நூல் காட்டு
சிங்காரமாக உன்னைகேட்ட கேள்விக்கு பதில்
செப்பாவிடிற் டேப்பைக் கீழ்போட்டு
சித்தஜன் பத்தினது உத்தமமொழியென
சிரமதை என்னடியில் உடன் சூட்டு
உங்கள் கக்ஷியை யெங்களாசானெடுத்திந்த
உலகமெங்கிலும் சவால்தான் கேட்டு
உற்றயெதிரிகளில்லை யென்றதன்பின்
உற்பத்திசெய்தாரிதைப் பார்சிட்டு
அங்கம் நடுங்காமற் கேள் அகிலமெல்லாம் புகழும்
அன்பன் இயற்றமிழிதை நாட்டு

ஆசையும் நேஸமும் வீசும் இராஜகோபால்
அமிர்தக்கவியினிமை ருசிகூட்டு
மங்களஞ்சேர் சபையில் சிங்கமெனவே வந்த
மறைவழியுணரா புலவீரே. (அரி)

## விருத்தம்.

தத்துவம்தான் யெத்தனையாம் வகைகளென்று
தடபுடலாய் கேட்கவந்த புலவாநில்லும்
மொத்தமது பதினேழாம் தொகையுமய்யா
மூதறிவோர் எழுதியுள்ள நூலில் கண்டு
சுத்தமாய் ஒவ்வொன்றின் கணக்குடனே
சொல்லுவீர் தனித்தனி தொழிலைவிண்டு
வித்தகரே யின்னுமுன் வினவலுக்கு
விளம்புமிந்த விடையதனில் கவனம் மாதோ

## ஒயிற்கும்மி.

நவரஸ கீத அலங்கிர்த மாகவே
நாவலரே யிதை கேட்டபின்பு
நாடியினி தேடியுரை பாடிபுகழ் கோடியென
நன்னயமாகப் பின் விள்ளுவீரா
அறுசுவைதன்னி லுதிரமது மாறி
ஆனது விந்துவாய் தானுமென்று
அறியாமலே விரிவாகவே பெரியோரென சிறியேனை
அற்புதமாக வினவ வந்தீர்
சுக்கிலசுரோணிதம் தன்னுடனே கூடி
சுகமாக ஜந்து ஜனிப்பதய்யா
சுருதியது கருதிவரும் இறுதியினை உறுதியுடன்
சூக்ஷ்மமாய்க் கூறுவேன் பாருமினி

ஆதியிலண்டம் தனைப்படைக்கப் பரம்
ஆவென்ற ஒலியில் வேதமாகி
அத்தனிட சித்தமிது உத்தமா மித்தரையில்
அனங்கனின் உற்பவம் தாமறியே
மறையவனீஸனிடம் வரம் பெற்றுமே
மாலங்கம் தன்னிற் பிறந்தானென்று
மண்டலத்தில் விண்டாரிதை கண்டாயிலே பண்டேகலே
மாதேவநூலதி லுள்ளபடி
காரிகை நன்னூல் நிகண்டகராதியும்
கற்றவர் சந்துஷ்டி யுற்றிடவே
காசினியில் வீசிகவி மாசிலாமற் பேசிவரும்
கர்த்தன் தேவியருள் பெற்றவனும்
இயலிசைநாடக பஞ்ச வியல்மொழி
இராஜகோபால் தமிழ் வாக்கியமே
இன்பம்தரும் அன்பன்புகழ் தென்பாய்மகிழ் பண்பாகவே
இத்தல மீதினில் வித்தகரே.

வேறு மெட்டு.

சத்தம்பிறக்கு மிடமதனை சாற்றுவேனிதோபாருமே
சித்திரம்போற் புத்தியதனில் சிதறிடாமற்கோருமே
வித்தகரேசங்கு நதியில்விளையும் உமிழ்நீர் தன்னிலே
கத்தும்மணிபூரகத்தைக் கண்டுதெளியு முன்னிலே
இத்தரையில் யிவைகளிருக்கும் யிடமறிந்துகூறுவாய்
இயம்பத்தெரியாவிடிலே யிந்தயிடத்தைவிட்டு பேறுவாய்
எத்திசையும் கீர்த்தியோங்கும் இயற்றமிழுல்லாசனும்
எந்தனுக்கு ஒதிவைத்த இராஜகோபால் தாசனும்

விருத்தம்.

பிழைபடவே யேட்டில்சில பாட்டெழுதி
புலவரென படித்திடவே வந்தீரின்று
இழைசேர்ந்து நூல்களாம் கலையைப்போல
இருக்கும்பல சாத்திரங்க ளின்னதென்று
தழைத்திடவே வாசித்துக் கற்றீரில்லை
தகாதமொழி பேசுகிறீ ரிதுவோஞாயம்
கழைக்கூத்து கவிராஜ ருங்கள்கக்ஷி
கற்றவர்க்கு யேளிதமாம் கவனிப்பீரே.

பாட்டு.

இத்தலமதிற்புராணம் சுத்தப்பொய்யெனத் தாங்கள்
இயம்பவந்தீரேகருத்து போதும்நிறுத்து சபையில்வெறுத்து
இனியுன்னை யான்கேட்பதற்குரைமறுத்து
பித்தன்தவமிருந்த தாரைக்குறித்தோவென
புகலவந்தீரேபாட்டு சொல்லுவேன்கேட்டு மதியைத்தீட்டு
பரப்ரம்ம சொரூபமதனை நாட்டு
கத்துக்கொடுத்தார்யோகம் சனகாதி நால்வருக்குக்
களருதுநூல்பாரு எனின்னம்வேறு உண்டெனில்கூறு
கம்பக்கவி காளமேகமுன் நேரு
அத்துவிதக்காவிய மெத்தனை வேதாந்தம்
ஆன்ஸர்நீ கொடுப்பாயா இல்லைவீண்வாயா கல்லாதநேயா
அவையிலாந்தை முழியென விழிப்பாயா
(உத்) சத்தம்போடாதே அது கேலி
இந்த—சபையிலுன் கக்ஷியது காலி
வத்தாததமிழ்க்கடல் சுத்தப்பொய்யெனத் தாங்கள் (இய)

2

மன்மதனென்றொருவன் இல்லையென்றோதிடும்
மார்க்கமதெதுசாது உண்டெனில்ஒது தத்துவவாது
மனதிற்கண்ட மாய்கையதுவும்தீது
பின்னப்படுவீரிப்போ பிரளாதீராரூதார
பிரிப்பிடமெதுகண்டு பிரித்துவிண்டு செய்குவீர்தொண்டு
பிதற்றவந்தீர் யோகிபோல் மொழிவிண்டு
நன்னயமாக உங்கள்வீட்டில் மனைவிமக்கள்
நாளுமிருக்கப்பேசி கொஞ்சுகிறீர்யோசி தேடியேகாசி
நவலுகின்றீர் ஞானவானென வீசி
கன்னியுடனணைந்து காதல்தீர்ந்தபோதே [போகம்
கழண்டுபோகுதேமோகம் இதென்னயோகம் செய்வது
கருத்திற்கொள்ளும் யெரிந்ததிதுவே யூகம்
(உத்) இன்னும்வேண்டுமோ சாக்ஷி
உனக்—கிருக்கும் காமமதின்காக்ஷி
பன்னிப்பன்னிப்புராணம் சுத்தப்பொய்யெனத்தாங்கள்(இ)

3

அடுத்து மற்றுமோர்பெண்ணை அணையுமென்றாலேஐயா
ஆகாதுஉங்களாலே அதன்பின்னாலே வந்துமேமேலே
ஆசையதும் உதிப்பது மெதனாலே
தடுத்துப்பேசாதேகாண் யெரிந்துப்பிழைப்பதற்கு
தரணியிலத்தாக்ஷி கண்டதேசூக்ஷி உண்டிந்தக்காக்ஷி
தருமசபையோர்களைக் கேள்சாக்ஷி
படுத்துவீட்டில் நல்லஜாமத்தில் குப்புறப்
பாருங்காண் நூல்தேடி எத்தனைகோடி சித்தஜர்நாடி
பஞ்சபாணக் கணையதைத்தான்சூடி
எடுத்து உண்ணும் அறுசுவையது காமமென்றால்

எப்பவன்யாரய்யா தாயென்னப்பொய்யா தங்கையைத்துய்
எழிலாய்ச் சேர்ந்தனேயுதா அதுமெய்யா [யா
(உத்) கடுத்துவருகுவதேன் கோபம்
அதைக்—கலக்கவிடாதது யார்சாபம்
கொடுத்த நூல்களை சுத்தப்பொய்யெனத் தாங்கள் (இய)

4

அழகில்மிகுந்த ஒரு அன்னியமாதைக் கண்டால்
அகஸ்ணமதுமீறி நெருங்கக்கோரி நினைவிற்றூறி
அலையவிடும் அதிகாரன் யார்தேறி
வழவழவென யினிவாயதை யிளிக்காதே
வல்லவனென்னும்தீரன் அங்கஜமாரன் பொங்கிடும்வீரன்
வையகத்திலிச்சைக் குடையசூரன்
பழகிட யின்னும்நீங்கள் இயற்றமிழாசிரிய
பலவானடியைத்தேடும் சிரத்தைசூடும் பணிந்துநாடும்
பகுத்தறிவுவிளங்கிட வந்துகூடும்
உழவிட்டுத்தமிழ்ப்பயிர் உலகமெங்கும் விளைக்கும்
உத்தமனுனசிலன் இன்னிசைலோலன் இராஜகோபாலன்
உறுதியுரையதில் மிக்கதுரைவேலன்
(உத்) கழரும்மொழியை உட்கொள்ளும் வித்வ
கவிபிருனமையினை விள்ளும்
அழலெனச்சாஸ்திரம் சுத்தப்பொய்யெனத் தாங்கள் (இய)

வேறு மெட்டு.

எழுவகையின் தோற்றம்கேட்டுவா
ஈரிரண்டு யோனி இனியமேனி இருக்கப் பார்த்துவா
கத்தாதே (எழு)
ஊர்வன விலங்குமரம் உத்தமரே பறவைதிறம்
நீர்வாழ் சுரரும் உறம் நீயும்நானும் மனிதவரம் (எழு)

வித்தண்டம் யோனியிடம் வியர்வையதுவும் திடம்
புக்தியதில் நீயும் மடம் புகலவந்த கேள்வியடம் (எழு)
எண்பத்து நான்குலக்ஷம் எடுத்துரையும் ஜீவஉச்சம்
கண்பட்ட நூலிற் கொச்சம் கலக்கமேனோ மனத்திலச்சம்
சுயற்றமிழ் பதிலைக் காட்டு சுருதிவழியதனை நாட்டு
இயற்றமிழ் இனியபாட்டு இராஜகோபால் அளித்தசீட்டு (எ)

(கந்தசாமி தேசிகர் பாட்டு.)

சங்கமதில் மதனெரிய வில்லையென்று
சாற்றவந்த புலவருக்கு விபரமாக
திங்களணி சங்கரன் விழியால்மாரன்
தீயானுனென் பதற்கு சுருதிகொண்டு
உங்களிடம் பாடவந்தே னிதைநீர் கேட்டு
உரைந்திடுவீர் உலகோர்கள் உண்மைமெய்க்க
மங்களமாய் சான்றோர்க ளெணைக்கொண்டாட
மடைதிறந்து கவிமழையைப் பொழிகுவேனே.

பாட்டு.

மாசிலா தமிழை வாசித்தோமென்ற ரோஷமதை நருக்கு
நிர்க்காதே முருக்குயிதென்ன கிருக்கு அப்படியருக்கு
நிலைத்ததுண்டா
நாசி சுழிமுனை ரேசகமாஞ்சித காஸவடிவாகி
அப்யாசமாகி தற்பானுகி நிற்பவன் யோகி
தாரையூதியில்
வீசிமூலக்கனல் பேசிடாதே அப்போ வாசிவாவென்றடக்கு
செய்திடுமிடுக்கு நிதானத் தொடுக்கு உண்ணுவை மடக்கு
கபாடமொடு
ஓசை முழங்கக் கேட்டாசிக்காமலே விசேஷமது வடியும்

அதனைக்குடியும் மௌனமாய் முடியும் ராகாதிபடியும்
தற்பரசோதி
நேசித்திடலிங்கம் ஆசைவாலாட்டுமா யோசித்துப் பெருக்கு
தெம்மாங்கு. [ (நி)

எண்வித சமாதியிலே தன்னை மறந்திருக்கையிலே
பண்ணுவதென்னவோ ஆசை ஒன்றும் செய்யப் போகா

2 [திசை

மேருமலை பெற்றதாரு பார்வதியும் பூர்வீகபரைதான்
சத்திக்குமுன்னேதான் ஜனகாதியர்தான் கேட்டதுண்மை
அப்போது பரன் [காண்,
சிருடனேயோகம் வேறு நினைவாலே பாரிலிருக்கையிலே
அவர்கள்செயலே அறிந்திடாமலே ஆகையினாலே
அவ்வேளைமத
னுமலர்பாணம் நீரணிபவர்மேல் வேறுகருத்தாலே
தொடுத்ததாலே காமாதிசெயலே அடக்கும்தொழிலே
நினைவுபடு [கும்
மாறுவதில்லையே ஆறுதொழில்மட்டும் போராடியே யடக்
வேளையில் மடக்கும் நிதானத் தொடுக்கும் உண்ணுவை கட
சத்தியின் சாபம் [க்கும்
சிருடனேஸ்காந்தம் பாரும்புராணமதில் மாரனுடகிருக்கு(நி)

தெம்மாங்கு.

யோகமுபதேசித்தோரே ஒன்றும் தெரியாதென்றீரே
ஆகையினல் மதனும்வெந்து ஆறுதொழில் நினைவும்வந்து

3

மாமறையோன்சிரம் தாமோதரன்கிள்ளி பூமகளும்கொடுக்க
வேதத்தைப்படிக்க யாகத்தைமுடிக்க கபாலம்துடிக்க
தேவர்களும்
கோமுறையோவென சோமசுந்திரனே நேமமாகஅடுத்தார்
கையிலேபிடித்தார் தலையை யெடுத்தார் அபயம் கொடுத்
பரமசிவன் [தார்
தாதோதரனடி பாமறியாமலே யேமாளியாய்ப் புலவா
இப்படியாகவா நடந்ததல்லவா வெவ்வேறுசொல்லவா
சபையிலுன்னை
நாமம்போட்டனுப்ப யேமனுக்கவந்தேன் காமனுடல்போச்சி
யிதென்னபேச்சி எப்படியாச்சி தப்படிப் பேச்சி
மதியறியாய்
போமளவும்நல்ல க்ஷேமமாகப் பாடி நாமமெடுப்பவர்க்கு(நிர்)

தெம்மாங்கு.

பிர்மஹத்தி சிவனைத்தொட பேயோடாடி அவனுங்கெட
கர்மத்திற் கிடானென்று காண்பியொரு நூலையின்று

4

ஆண்வண்டதுவும் பூங்குலையைக்குத்தி தேன்பெருகும் ஓடை
கல்வியின்வாடை மந்திகள் ஜாடை செய்திடும்மேடை
தாவியே தஞ்சை
காண்டீபனென பாண்டித்தியப்புகழ பூண்டகுருமுறையே
அத்வீதகறையே ஞானத்தின் நிறையே கவிக்கு இறையே
அறிந்திடாயோ
மான்மியன்புண்ணிய வான்கந்தசாமிக்கு பான்மை முடி சூ
அடிப்பேன்பல்டி பாணுவை சுழட்டிசெய்யாதே வல்டி [ட்டி
சபையதின் முன்

யேன்தயங்குகிறீர் ஓம் கருத்தைவிட்டு வீண்கக்ஷியின்
விவரமறியே பனேயின் நரியே எழுதும்விரியே [வழியே
சல சலென
தூண்துரும்புமென வான்வகையிலுயர் மான்ஒட்டமே
[நருக்கு (நிர்)

வேறு மெட்டு.

என்ன சொன்னுனும் செவி கேளாத மாந்தருக்கு
எங்கே மருந்தைத் தேடுவேன்
அண்ணல்விழியால்மாரன் அனலாயெரிந்தானென்று
முன்னே சுருதி சொன்னேன் முழுதினும் மறந்தாரே(என்)
ஆறுதாரத்தைப் பிடித்து—உலகமதில்
அன்பர்கள் தன்னேயடுத்து
மூலாதாரத்தைக்கொண்டு மூட்டினேன் மருந்து நான்
எடறியாதவனென் றேய்க்காதேயென்னிடத்தில் (என்)
பாவலர்சபையடுத்து—பகவத்கீதம்
பாடினேன் புராணம் தொடுத்து
ஆவலாய்த் தஞ்சைநகர் அன்பரே ஓடிப்பாரும்
தேடிப் பிடித்து வந்ததிவ்ய மருந்துயிது (என்)
இன்னும் மருந்துப்பாருமே—கற்ருேர் சபையில்
ஸ்கந்தப் புராணம் தேடுமே
சின்னஞ் சிறுவனென்று சிந்தை நொந்தலேயாதே
பித்தந் தெளியவைக்க மெத்தமருந்துசொன்னேன் (என்)
போதும் போதுங்காண் நிறுத்தும்—புராணங்களே
பொய்யெனச் சொன்னீர் கருத்தும்
வாதியே கேளுமிப்போ வழுத்திடும் கேள்வியிதை
ஓதி வருவீராஞல் உனக்கே கொடுப்பார்தோடா (என்)
இந்தக்கேள்விக்கு பதிலாய்—எடுத்து சொன்ஞல்
இப்போதே நீயும் பெறுவாய்

அந்தமுடனே மொச்சை அவல்பொரி பயருண்டை
விந்தையாய் நான் தருவேன் வேணப்பசிகளாற (என்)

மன்மதனுக்குப்பேரு—எத்தனையையா
மாநிலம்தன்னில் கூறு
முற்றும் ஒவ்வொரு பெயர் மொழிந்தக்காரணமென்ன
நத்தியே சபைதனில் நாடியுரைக்கவேணும் (என்)

டேப்புதுந்தினவடித்து—வினவின்விடை
சொல்லிவருவீர் படித்து
ஏப்பம் விட்டுச் சபையில் என்னெதிர் விழிக்காதே
சாப்புக் கொடுத்து அப்பால் ஷாகிரு பாடு பாடு (என்)

தத்துவ ஞானி புகழும்—கந்தசாமி
தாசன் மொழியைக் கேளும்
முத்தமிழ்மறை யெங்கும் மொழியும் சிறுவன்முன்னே
எத்தைக்கொண்டே மாற்ற எண்ணங்கொண்டீர் புலவா
(என்)

வேறு மெட்டு.

புலவீரே மதனெரியாசிரே புகல்வோமென்றீரே
பூவேளுக்குருவிலா புகழையறிந்து போற்றுவீரே
சாற்றுவீரே
மதிசூடி அரன்மேல்கணை ஜாடிமாய்ந்த நாளைத்தேடி
இந்த - மாநிலம் கொண்டாடுவதை யேனென்றறிந்தோதே
யேன்வாதே
உலகசாக்ஷி மதனெரிந்த காக்ஷி உரைத்தேனத்தாக்ஷி
நீர்-ஓர்ந்த வெரியாகக்ஷி பேர்ந்து ஒழிந்ததாயெண்ணு
துதிபண்ணும்
தமயந்தி தடுமாறியே மூந்தி உரைத்ததாலே அந்தி
வண்ணன்-கண்ணுலெரித்தது பொய்யாமோ
மெய்போமோ

எருமுட்டை எழிலார் முத்துக்கொட்டை பேய் கரும்புத்
[தட்டை
அதை - எடுத்துக் கட்டி நட்டு அடுத்துக்கொளுத்துவதை
பகைபோக்கு [நோக்கு
கனயீஸன் காருண்யதாசன் கந்தசாமி உல்லாஸன்
பகர் - கவியினுரையைக் கொண்டாடு
புகழ்பாடு.

---

# சிங்காரம்

## விருத்தம்.

மங்கையேமயிலே எந்தன்மனதிற்கிசைந்த பெண்ணே
புங்கவனருளால் மதுரை புதுமையைப் பார்த்துவிட்டோம்
எங்கினும் புகழும் மதராஸ் எஸ். ஐ. ஆர். இரயிலேறி
தங்கமே செல்வோ மின்று தரணியோர் மகிழத்தானே

1

மன்னர் புகழும் திருகன்னியிளங்குயிலே
மகிழ்வாயென்னையணைந்து வாடி வாடி
மண்டலத்தோர்மகிழும் சென்னைமா நகருக்கு,
மங்களமாகச் செல்வோம் கூடி கூடி
தென்மதுரைப்பதியின் தெப்பக்குளத் தெருவை
தேன்மொழியே கடந்து சேடி சேடி
தெரியவே பாரதோ போஸ்டாபீஸ் பிரபல்யம்
திருமலைநாயகர் மால் நாடி நாடி
(-த்) அன்னமேயிவரிட முன்னுளரசாக்ஷி
அற்புதக் கச்சேரி கோபுரமிதன் காக்ஷி
இன்பமிதுதானின்னம் வாடி வாடி (மன்)

2

செங்கன்மால் தங்கையெனும் மீனாக்ஷியம்மனிட
சிறந்த சன்னியிது பாரு பாரு

சேல்விழியாளேரயில் அடியில் அநேககூட்டம்
சீக்கிரமாகச் செல்லக் கோரு கோரு
தங்கமே நானும் சென்று டிக்கட்டு வாங்கிவர
தயங்காதே இவ்விடத்தில் சேரு சேரு
தக்ஷணம் வண்டிபோக மணியோடு பிகில் சத்தம்.
தையலே கேட்குதிதோ ஜோரு ஜோரு
(உத்) சங்கை கொள்ளாதே யின்னம் மார்ச்சு பாஸ் வாங்கி
சதுராகவே ரயிட் கொடி காட்டிட ஓங்கி
அங்கம் நடுங்கப் புகை யோடி ஓடி (மண்)

3

சமய நல்லூரிது சோளவந்தானைவிட்டோம்
சதுராய் அம்பாத் துரையை நாடி நாடி
ஜல்திவடமதுரை அய்யலூர் வந்துவிட்டோம்
சாற்றுவேனிதை வையம் பாடி பாடி
கமலமேதென் களத்தூர் திரிச்சினுப்பள்ளி தாண்டி
கண்டோர் திருவரம்பூர் சேடி சேடி
கற்பகமே பூதலூர் தஞ்சை யீதய்யம் பேட்டை
காணலாம் பாப நாசம் தேடி தேடி
(உத்) அமரர் பணியும்பால சுந்ரப் பெருமான் பெண்ணே
அன்னமே கும்பகோணம் நேரினில் கண்ணே
நமது பசி தணிப்போம் வாடி வாடி (மண்)

4

திருவிடை மருதூர் நரசிங்கப் பேட்டையிது
தேன் மொழி மாயவரம் பாரு பாரு
திவ்யமாகுமிந்த அநந்த நாத புரம்
தெம்பாய் விளங்குததோ நேரு நேரு
வருகும் சிதம்பரம் வைத்தியீஸ்வரன் கோவில்
வல்லவர் நடராஜர் சீரு சீரு

வஞ்சியரே கொள்ளடம் ஆற்றினில்மீது வண்டி
வணங்கிப் போவதை நீ கோரு கோரு
(உத்) அருகிற் பரங்கிப்பேட்டை ஆலப்பாக்கமிது
அன்னமே கூடலூர் திருப்பாப்புலியூர் மீது
பெருகுதே வேகமுடன் ஓடி ஓடி (மண்)

5

நெல்லிமா நகராகும் பண்ருட்டி விழுப்புரம்
நேரில் இருக்குததை நாடி நாடி
நேசியே விக்ரவாண்டி மயிலமும் திண்டிவனம்
நினைவாய் பெரும்பயரைத் தேடி தேடி
செல்லும் அச்சரவாக்கம் மதுராந்தகம் விட்டு
சேர்ந்தோம்பட்டாளமதைக் கூடி கூடி
செங்கற் பட்டிது நேரே சிங்கப் பெருமாள் கோயில்
செப்பும் கூடுவாஞ்சேரி யோடி ஓடி
(உத்) புல்லுவேனடியே வண்டலூர் பல்லாவரம்
புகலும் பறங்கிமலை சைதாப்பேட்டையின் திறம்
எல்லாமுணர்ந்து யின்னம் வாடி வாடி (மண்)

6

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு எழும்பூரு ஸ்டேன்
குணமாயிறங்கடியே நேரு நேரு
கோதையே மின்சாரவண்டியிலேறியே நீ
கூறும் சிறப்புகளைக் கோரு கோரு
ஆடலாகிடும் பொம்மை காலேஜதிது தாண்டி
அருகினில் பெரியமெட்டு பாரு பாரு
அற்புதமாகுமிது கண் காரேஜ் மகாராணி
அம்மையாற் தோட்டமதின் சீரு சீரு
(உத்) கூடலாம பீப்பில்ஸ்பார்க்கின் கீர்த்தியைக் கண்டு
கொச்சை கொள்ளாதே தச்சர் மாளிகையுண்டு
நாடக டவுனிதை கூடி கூடி (மண்)

7

உச்சிதமான ரோஜா மருவும் மருக்கொழுந்து
ஊசி மல்லிகையடி சேடி சேடி
ஒக்கும் குடமல்லிகை நந்தியாவட்டமுடன்
உயர்ந்த சாமந்தி புஷ்பம் தேடி தேடி
கச்சிதமாயிருக்கும் சூரியகாந்தி யின்னம்
கஸ்தூரி மணமதும் கூடி கூடி
கதம்பமுண்டிருவாக்ஷி கன்னியரே உனது
கருத்துக்கிசைந்த தெல்லாம் ஜோடி ஜோடி
(உத்) அச்சமில்லாது வீரர் சண்டையிடும் ரவுண்டு
அலங்கிர்தமாகுததில் பாண்டடி மேடையுண்டு
பச்சை யிளங்குயிலே வாடிவாடி (மண்)

8

அறையணுவாங்கிவிடும் மிருகக்கிடங்கிதுவே
அஞ்சுகமே செல்லலாம் நேரு நேரு
ஆங்காரமாகுதடி வேங்கை புலியும்கண்டு
ஆளையடிப்பதுபோல் பாரு பாரு
மரையிலுயர்ந்த சிங்கம் காட்டானைமீது 'பாய்ந்து
மண்டையுடைப்பதென்ன சீரு சீரு
மந்திகள் கூட்டமும் காண்டாகாடி யின்னம்
மனிதக்குரங்தனின் பேரு பேரு
(உத்) உறைந்திடும் தீப்பக்ஷி உயரத்தைப்பாரு
உலகில் இதற்குநிகர் எங்குண்டு கூறு
நிறையிற் குறையாபெண்ணே வாடி வாடி (மண்)

9

'தேன்சிட்டுலால் சிட்டு தெரியுதாலங்கர் சிட்டு
திடமாகபல்டியிட்டு ஆடி ஆடி

தேவியேமணிப்புறு மாடப்புறுவும்கிள்ளை
 தேடியே புல்புல்கள் கூடி கூடி
வான்பக்ஷி மரங்கொத்தி வக்காவுடனே கொக்கு
 வாழுதழகுடனே நாடி நாடி
வையகமதிலிந்த துய்யகுணமிகுந்த
 வளமையை என்னசொல்வேன் சேடி சேடி
(உத்) மான்களின் கூட்டமது மலைகளைநாடியே
 மனதுசலியாமலே சல்லாபம் கூடியே
ஏன் எழுந்தோடுதுபார் தேடி தேடி

10

பாதிரிமரக்கிளையில் சாதகப்புள்களும் கூடி
 பாடியாடும் பஞ்சவர்ணச் சிறு சிறு
பாகமுட னசோகு அகில் கொய்யாமீதினிலே
 பச்சைக் கிளியழைக்கப் பாரு பாரு
நீதியாய் சென்னைநகர் வண்ணையம்பதி வாழும்
 தேசன் சிங்காரவேலைக் கோரு கோரு
நிச்சயமாய் நம்மிட பக்ஷங்கொண்ட விற்பனர்கள்
 நினைவிலிருக்கும் கவிஜோரு ஜோரு
(உத்) மேதினிபுகழ் இராஜ கோபால் தமிழ்வாக்கு
 மெல்லுரை எல்லவரும் கொள்ளவே ஜோக்கு
ஓதியினி சோதியுடன் வாடி வாடி (மண்)

விருத்தம்.

மற்சிலம்ப வீரனென வெற்றிவாய்ந்து
 மானிலத்தோர் கொண்டாட போற்றி நாளும்
உற்றவராம் ஷண்முக சுந்திரப்பா
 உஸ்தாத் அவர்கள்தம் தாலீம்தன்னில்
அற்புதமா யாண்டுவரும் சாமான் புகழ்
 அறியவே சபையோர்முன் சிங்காரமாக

நற்றமிழாற் பாடுகிறேன் நாவலரே
நானிலத்தில் தருநூலின் நன்மைதாமே.

2

தேசமெங்கினும்புகழ் வீசும்சிலம்பக்கூடம் தேடி
தேன்மொழியேவாடி திறமுடன் கொண்டாடி நமது
தீர்ஷண்முகசுந்திர வீரர்திருப்பதத்தை சூடி
வாச மலரில்வளர் அம்பாளருளை மனம்நாட்டி
சாமான்களைக் கூட்டி சவாலெடுத்து சூட்டி சலாம்
வாங்கிக்கொள்ளடி ஆசான் தனக்குக்கண்ணூட்டி
நேசருடனிறங்கி தோப்காணம் முதல் போடு
அந்தருடானுடு அடித்து பல்டிசூடு இன்னம்
நேர்மையான டிங்தண்டாக்கொடுத்து ஜதைகூடு
(உத்) மோசம் போகாதே பெண்ணே பாரு மேலே
ஜோடித்த ஆயுதங்கள் ஜோரு
பாசம் கொடுக்குமோடிபார்க்கும் போதேயதைத்தேடி (தே)
பில்டிங்கிருக்கிறதோ எல்லோரறிய அதிலேறி
கணக்கதைமீறி கஸாத்து செய்கோரி பின்
புறட்டியே கர்லாவதை உருட்டியே சுத்துகளைவாரி
வல்லமையாய் ஜோடிஎடுத்து இருகாமும் மாற்றி
ஒவ்வொன்றாய் ஏற்றி ஒடுக்கமாய் கையாற்றி இந்த
உலகம் மயங்கிட விதம்விதமாகவே தூற்றி
(உத்) கல்லுபோலுன் தேகமதையாக்கு இது
கஷ்டமோ செங்தோலாவின் ஜோக்கு
நல்லடெம்பில்ஸிதை பம்பரம்போலவே தேடி (தேன்)
சாண்டோஸ்பிரிங்கென சாற்றும் இங்கிலீஷ் முறையொன்று
படத்தைப்பார் நன்று பலிதமாயின்று சிறு
நரம்பெலும்புகளுக்கும் உறத்தைக் கொடுக்குமே சென்று
ப்ரண்வெட்ட தனில்ரெண்டு பந்தங்களைக் கொளுத்திநின்று
கியால்வித்தைகளென்று கிரிக்கிப் போட்டினின்று பிகில்

பாணு எடுத்துடான்வாங்கிச் சுழட்டடி மூயன்று
(உத்) தோன்று தாஸ்பிரிங் பாணுமானே அதில்
தொடுத்த விசித்திரங்கள்தானே
ஆண்டுப் பாரதிசயம் அடுக்கடுக்காகவே தேடி (தேன்)

பட்டாவுடனே சார்பட்டா கோர்பட்டாவின் சிரு
டால்கஜொருவாரு டக்காராகப் பாரு இதை
பஸ்கிசப்டியுடன் மண்டியிட்டுசெய்தால் ஜோரு
கட்டாரிபாலா லேஜியமதனைக்கோரு
பரோட்டாயிதுநேரு பாய்ந்து மனம்தேரு இந்த
பந்துவகைகளின் அந்தமதுவே கைம்மாரு
(உத்) கட்டுவாய் மார்பந்திதைமேலே சுற்றும்
கயிர்பந்தாமிதனைப் போலே
எட்டுபந்துடன் எக்தாரா பந்தையும்தேடி (தேன்)

மாடி எடுத்துவரும் ஜோடி கொம்படியைக் கட்டு
ஓங்கியே வெட்டு ஒருபுறம் தட்டு பார்
மகத்தானதுஸ்மனி லாறுபே ரொருசெட்டு
தேடிப்புள்களை திடமாய்ப் பாணுமீதில் கொட்டு
பறக்குதடிபட்டு பதுங்கியே நெட்டு வெகு
திவ்யமான அலகெடுத்து விசிருவதேமெட்டு
(உத்) நாடியே கைக்கிளவஸ்போடு நம்
சண்டைக் கெதிரியார் யிடு
கோடிகோடியாய் விளையாட சாமான்களைத் தேடி (தேன்)

கோணத்தடியுடனே குண்டாந்தடி யிதுவுமாச்சு
வளைதடியின்பேச்சு வாங்குத் தடிமூச்சு மிக
குணமானபாலாவதை கூட சேர்த்திட்டால் ஏச்சு
ஆணவங் கொண்டவரை யடக்க வாங்கருவாள்வீச்சு
கையிலெடுத்தேன்கூச்சு காட்டாதே நீ பூச்சு அன

லாகப்பற்றியெரி யம்புவருகுதென்னு பேச்சு
(உத்) காணமடைவாயேன் செருக்கு யீட்டி
நாசம்செய்திடும் சுருக்கு
காணவே பல்லயம்கதும்பி வருகுது பார் தேடி (தேன்)

அஸ்திர சஸ்திரமெல்லா முரைக்கவென்றால் நேரம்
பெண்ணே ஒருவாரம் போதாததின் பாரம் இனி
ஆனமட்டிலும் வளையம்போடுவ துன்தீரம்
குஸ்திஜதையுடனே கோர்த்து கைமலாய்ந்துவீரம்
எதிரிகளைகோரம் எடுத்தடியுதாரம் ஜெயம்
கொண்டு ஆனமட்டும் பெற்றுரீபுஷ்ப ஹாரம்
(உத்) கஸ்தியடைந்தோடினுர் முன்னே நம்
கக்ஷிக்கெதிரிகளும் பின்னே
விஸ்தாரமா யின்னேர் தினத்திலுரைக்குரேன் தேடி (தேன்

கீர்த்தியுற்ற விநாயகமாமவர் பேரு
எதிரிகள்யாரு இல்லையெனக்கூறு நல்ல
குணவான்முக்குந்து நாயுடுகாரவர் சீரு
நேர்த்திதிருமலை செட்டியாரை நீ கோரு
சீடர்களைப்பாரு ஜெயமடையத்தேரு இந்த
நாட்டிலெங்கும் புகழ்கொண்டால் செட்டியார் நேரு
(உத்) பார்த்துப்பணியடி சீராய் நம்
பகதூரவர்களை நேராய்
பூர்த்தியானவித்தை புவியில் கிடைக்குமடிதேடி (தேன்)

இனிமையான தேன் சீனிகற்கண்டுபோல் வாக்கு
மிட்டாய் ஜிலேபிகேக்கு மைசூரல்வா யாக்கு ருசி
இன்பமானதோர் இம்மூர்த்திபோல் கவிஜோக்கு
கனிந்த மா பிலா வாழையதுவுமொரு போக்கு
ஆப்பிலதைநீக்கு அதிரஸத்தை தூக்கு நம

தன்பன் இராஜகோபால் அருள்பெற்ற தமிழ்வாக்கு
(உத்) நானிலம் புகழ்ந்திட பெண்ணே நாம்
நாடிதினம்படிப்போம் கண்ணே
ஏனின்னம் தாமதம் எடுத்து விளையாடத்தேடி (தேன்)

3

சந்திரவதன சிங்காரி ஒய்யாரி
தையலே இவ்வேளையடிமானே
தைரியமாக நீவெளியினில் போற
சங்கதியெனக்குச் சொல்லடி தேனே
உச்சிதமாக உன்னையீன்ற தாய் தந்தையரும்
ஓகோ அடித்துன்னை வைதாரோ
ஓலமிட்டழுது நீகண்ணீர் வடித்துக்கொண்டு
உறுதியாய்ப்போவதை யறியாரோ
பச்சைநிறமுடைய பாவையே உனக்கு
பாதகரெவர்செய்த சதிதானே
பருவமுடைய சிறுவயதினில்போக அந்த
பாவி மலர்க்கணையைத் தொடுத்தானே
(உத்) இக்ஷணம் ஒருமொழி இயம்புவேன் கேளு
என்றைக்கு மிவ்விடத்தில் இருக்கலாம் மேலு
தக்ஷண முனக்குரைத்தேனடி மானே (தைரி)

இனியில்லாக்கோபம் என்னடி உனக்கு
இப்படி அலங் கோலமாப்ப் போக
இளங் கொடியிடையே நீ கலங்குவ தேனோ
ஏக்கமுற் றனுதினம் முகம் வேக
கனிமொழிரதியே நாம் பசியாறி யிருபேரும்
கவலையிற்றிருக்கலாம் மிகவாக

காசினியோருன்னை வேசியாளென்று சொல்லி
கடத்தினதேது சொல்மனம் நோக.
(உத்) தனிமையில் வீணாய் அடி சகிமானே
தவிப்பதுமேனோ சொல்லடிதேனே
சனிய னுனக்குசெய்த விதிதானே (தைரி)

பட்டுச்சரிகை சேலை பாவாடை ரவிக்கைக்குள்
பத்தாங்குலாவுகடி மடமானே
பாஜூபந்துதோட்டா சோட்டாக் கைவளையல்
பதக்கங்களைக்கழட்டி கொடுப்பானே
தட்டு மூக்குத்தி புலாக்கு லோலாக்கு
ஜடையில்லை சடைகுப்பி எடுப்பானே
தப்பித முன்மேல் இப்படியிருக்க
சாதனைசெய்து வீணாயிருப்பானே
(உத்) வாட்டமுற்று நீமயங்குறாய் தானாய்
மனப்பித்துகொண்டு ஏனோ அலைகுராய் வீணாய்
சட்டென்று போவதேனடி மானே (தைரி)

வஞ்சி நீமயங்கி நெஞ்சமும் கலங்கி
வாடாதே யிவ்வேளை வாமயிலே
வாசமுடனே யிருபேரும் சுகித்து நல்ல
மையல் கொண்டிருக்கலாமடி குயிலே
தஞ்சைக் காந்தைபதி கொஞ்சி விளங்குதடி
தையலே இராமசாமிகவி ஓயிலே
சல்லாபமாக இராஜகோபால் பாட்டை கேட்டு
உல்லாசமாயிருப்போம் சென்னையிலே
(உத்) பஞ்சவர்ணகிளி பாவையே கேளு
பண்புடன் பரிமள கெந்தங்க ளின்னூரு
மிஞ்சி யுனக்குரைத்தேனடி மானே (தைரி)

4

அதிமிகாஞ்சித பதிபுகழ் சுந்தா
அரிவையரே தென்றல் ரதமேரு
அணியணியாய் வனசோலை சிங்காரங்களை
அற்புதமே கண்ணால் பாரு
எதிரேமாதளை செடிதனில் சிட்டுக
ளிங்க ணடிக்குதடி ஒரு ஜோடி
ஈச்சமரத்திலைகளில் அறிசபாஷ்
இயல்புடன் கட்டுதடி ஒரு கூடு
மதிவதனாரதியே ஜதை ஜதையாகவே
மருவி விளையாடுதே சரலாக்கா
மண்டைகளுடையவே கொண்டலாத்துகள்
சண்டைகள் செய்குதடி வெகு ஜோக்கா
அதிகக்கலாபமயில் ததிங்கணத்தோமென
ஆடுதுபூக்குயில் பாடுதொரு (அணி)

குகையிலிருந்து ஒருவேங்கை உதம்புகுது
கோகிலமே மனப்பயமாமே
குரங்கு தாவியதோயிறங்கி யேகுது
குறிசொல்லவது நினைவாமோ
சிகைவளர்க் கரடிதேடி யீசலை
தின்னப்பார்க்குது உன்னிதமாய்
சிலம் சிலம்மென யானைவருகுது
சிங்கங்கண்டால் விட்டதைப் போமோ
தகைபெருமாடிகள் ஒடியாடி மூண்டா
டக்கர் கொடுக்குதடி தனித் தனியே
தயங்குது ஒநாய் ஜாடைகாட்டியே
ஜல்தி பாரடி என் கண்மணியே

நகைப்பாகுதடி நான்சொல்வ துனக்கு
நாரணிமகளே நீ விடைகூறு (அணி)

மேலாகவேபார் ஆலாசுழள
மீன்கள் ஜலத்துக்குள்ளே நுழைய
மிறட்டுதே உள்ளான் விறட்டுதே சீக்ரு
மெதுவாய் பதுங்கியே வயிர்நிறைய
நாலா பாஷையும் பேசுதுமைனு
நாகரீகமான புல் புல் புல்
நாடி வருகுதந்த வானம்பாடியை
நரையான் கொத்தவேசல் சல் சல்
சோலா பக்ஷிகள் ஆலாக்கிளைகளில்
தூக்கியே பகிரி வெகு சுருக்கா
ஜோடியதைவிட காலியானபின்
சுணங்கியே பறக்குதது நிறக்க
அலாம் சலாமென உல்லாலகலக்கி
அழகைப்பாரடி அதன் சீரு (அணி)

மல்லிகைமுல்லை மலர்ந்தபாதிரி
மணம் வீசுதேயிந்த க்ஷணநேரம்
மருவு சண்பகம் உருகுநல் ரோஜா
மலர் தாமரையே அதின் விபரம்
துல்லி நீலோற்பலம் செவ்வலரி
துளசி கதம்பம் கஸ்தூரி
சொகுசாண பலமாதிரிபுஷ்பம்
சொல்லமுடியாதடி அதன் சீரு
எல்லாம் உணர்பட்டா ரும சீடரை
ஏற்ற வரங்கேளடி மடமானே
எடு எடு குறடா விடு விடு தேரை
இனியிருப்பது சரியல்ல தானே
அல்லியசோகு அலறிவெட்டிவேர்
அள்ளிக்குடியடி யடியதன் சீரு (அணி)

1

மானே மரகதமே மயிலே யிளங்குயிலே வஞ்சி இ - இ
மதராஜன்கொடுத்த கணையாலே உயிர்போகுதே மிஞ்சி
தேனே சிநேகிதம் வேண்டுமானு லெந்தனைச் சேரு எ - எ [உந்தன்
தெருவிலநேககாளாய் காத்துயிருந்தேனதைப் பாரு
மானேபோன்ற ரதிமறப்பதில்லேடி யுன்பாஸம் இ - இ அந்த
மனது வருத்தத்தாலே ஏகுவேன் கப்பல் பரதேசம்
(உத்) நானே சகலரையும் மறந்து பெற்ற
தாயார் தகப்பனையும் துறந்து
தானே மீன்கொடிபோல்தடுத்து கலந்திட்டவஞ்சி க-க் (மா)

2

கன்னிப்பருவம்தனில் கட்டியணைந்த சுகத்தாலே அ - அ [இப்போ
கலங்குதே மனமதுகலேயும் மானுமதுபோலவே
உன்னிதமான உன் அழகை நினைக்கப் பெரும் மோகம் நி - நி [எந்தன்
உயிருக்கே ஆபத்தாய்முடியுதே என்ன செய்வேன் சோகம்
(உத்) அன்னீதமாக யென்னைவிடுத்து வீணுய்
ஆவியும்போகாமல் தடுத்து
நன்னயமாகவே காத்துக்கலந்திடடி வஞ்சி க - க (மா)

3

மோகஞ்முன்னையன்றி மேலே உலகந்தனிலேது உ - உ சிலர்
முன்னுலறிவில்லாமல் சொன்னமொழிகளெல்லாம் தீது
ஆக்ஷிக்குறியரதி அணங்கி நீயொருவளாகும் நீ - நீ கண்டால்
அந்தரதேவர்களும் வந்து துதிபுரியலாகும்

(உத்) காக்ஷிக்குறிய நீரதியே தேடும்
கடவுளைத்துதிபுரி பதியே .
மாக்ஷிமையாக என்மனதிற் கலந்தாயோடிவஞ்சி க - க (மா)

4

தஞ்சைக்கரந்தைபதி கொஞ்சிவிளங்குதடி சிறந்து வி-வி அடி
தையலே இராம்சாமி சீடன் சொல்லிதை அறிந்து
வஞ்சியரே நாம்கொஞ்சிப் பள்ளிக்கூடத்தில்படித்து ப-ப கூடி
வந்த அருமையை சொந்தமா யுடன்மகிழ்த்து
(உத்) கஞ்சமலர் வதனவாஸன் கற்றோர்
கருத்திற்குரிய தமிழ் நேசன்
இரஞ்சிதமான நம் இராஜகோபாலடி வஞ்சி கோ - கோ (மா)

1

தோகைமயிலையொத்த ஜாகைரதிக்கிளியே வாடி வன
சோலை சிங்காரங்களைப்பார்த்து வருவோம் விளையாடி
மோகமடங்கவக்கா போகமுடன் செய்யுதே ஜோடி அதின்
முன்னே மயினங்கள் பெண்ணே ஆடுதுபார் கூடி
பாகக்குயிலினங்கள் வேகமாய்ப் போகுதுமுன்னடி அந்த
பாட்டுக்கிசைந்ததாளம் போட்டு குமாய்க்கும் புறு ஓடி
சோகங்கொடுக்கும் கொக்கோக லீலைசெய்யவாடி (வன)

2

காடைசிறகொதுக்கி பேடைத்தேடுவதை நீபாராய் அங்கு
கானுங்கோழி ரெக்கையை தானுய் விரிக்குதென்ன ஜோராய்
ஓடைதனிலே அன்னம் ஜாடைசெய்யுதகின் நேராய் உடன்
ஓடியடையான்பாடி கூடிக்குலாவுதுடன் சேராய் [ (வன)
சேடையளிக்குந்தென்றல் வாடைக்குகந்த பெண்ணே வாடி

3

செண்டுபோல் பறக்கும் கொண்டலாத்துக்களைப்பாரு நல்ல
சிரண்டோன்புனித சிட்டுமுரண்டு செலுத்துதென்ன சிரு
மண்டையுடைய வௌவால் சண்டைசெய்வதென்ன ஜோரு
அதோ மானுங்கலையுடனே கூடிக்குலவுவதும் சீரு [(வன)
தொண்டுசெய்துமே யிதைக்கண்டாலுனக்கு மோக்ஷம் வாடி

4

குடந்தை நகரில் வெற்றிகுடந்தை தமிழ்க் கொடியைதூக்கு [நல்ல
குணவான் சாமிநாத கனவான் அருளிச்செய்தவாக்கு
மடந்தை வாழ்ந்திடுமென் மனதிற்கிசைந்த விடைநோக்கு [அதில்
மகிழ்ந்து சிங்காரவேல் இசைந்தாரிதுவே தடாக்கு
துடர்ந்து என்கையைக்கிட்டி நடந்துவருவாய்
பெண்ணே வாடி (வன)

1

இந்த ஒருசேதி இந்த ஒருசேதி
எந்தன் கணவா நீயிதை சேதி (இந்த)

முந்திவருடமொரு நாளையில்தானே
முழுகிடப்போனேன் தண்ணீர் குடங்கொண்டு பானே
அந்தவேளையிலொரு வாலிபன் கோனே
ஆசைகொண்டென்மீதில் அடிதுடர்ந்தானே (இந்த)

2

முன்னும் பின்னுமாய் வெகு முடுக்குடன் நடந்து
மோகவலையில் சிக்கி முகமது மெலிந்து
பண்ணின இரகசியப் பதமதை மறந்து
பக்கத்தில் வந்தானுற்றங்கரையதில் பறந்து (இந்த)

3

ஜலத்திலிறங்கி துயில்களைந் திடும்போது
ஜாடையாய் கண்விழி கொங்கையின்மீது
கலக்கமுற்றிடவவன் நாட்டினனப்போது
கண்டதையின்னம் சொல்வேன் கேளுமிப்போது (இந்த)

4

கொத்துச்சங்கிலி சாவிகலகலவெனவே
கோதைநான் பார்த்திட மண்மீதில்விழவே
வித்தைகள் செய்தான் நானும் விருப்பமுற்றிடவே
வேலங்கொம்பை யொடித்தான் பல்துலக்கிடவே (இந்த)

5

எதிரினில் நின்றுக்கொண்டு அவன் பல்லைதேய்ப்பான்
என்னையே சும்மா சும்மா ஏறிட்டுப்பார்ப்பான்
மதியிழந்தவன்போலே மண்மீதில் விழுவான்
மயக்கமுடன் நெருங்கி வாயைக் கொப்பளிப்பான் (இந்த)

6

தண்ணீரைத் தூக்கிக்கொண்டு நான் வரும்போது
தனிமையிலவனென்னை செய்திடவாது
எண்ணியே நாளரன் பக்தியாய்மீது
இருந்தவன்போலே கையை இழுத்தானப்போது (இந்த)

7

சிங்காரமாக ஒரு மண்டபம் அடுத்து
சீக்கிரம் சேலையை செங்கையா லவிழ்த்து
பங்கமிலாமலென்னை சேரவேதுடித்து
